Registered as a Newspaper | பக்கங்கள் 16 | விலை ரூ. 50

புதன் பொய்கை

# உதயன்

சுடர் : 38
கதிர் : 256

புதன்கிழமை 09 ஓகஸ்ட் 2023

ஆடி 24 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

## தண்ணீர் இல்லை: மீண்டும் மின்தடை?

### அமைச்சர் காஞ்சன சூசகம்

கொழும்பு, ஓக. 9
நீர்த்தேக்கங்களில் தண்ணீர் இருப்பிழப்பு ஏற்பட்டு, மின்னுற்பத்தி பாதிக்கப்படுமாயின் நாட்டின் ஒருசில இடங்களில் மின்தடை ஏற்படும். ஆனாலும், முடியுமான வரையில் தடையில்லா மின்சாரத்தை வழங்குவதில் அரசாங்கம் உறுதியாக »15



மாற்று மின்கட்டமைப்புக்கான

## எதிர்ப்பாலேயே நெருக்கடி!

### அமைச்சர் காஞ்சன தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 9
நாட்டில், காற்றாலை போன்ற மாற்று மின்கட்டமைப்புகளை உருவாக்குகின்றபோது அதற்கு வெளிப்படுத்தப்படும் எதிர்ப்பும் இந்த நெருக்கடிகளுக்குப் பிரதான »15

# நாட்டில் தண்ணீருக்கு பொலிஸ் பாதுகாப்பு!

கொழும்பு, ஓகஸ்ட் 9
இலங்கையில் உள்ள குளங்கள், நீரேரிகள் மற்றும் நீர்த்தேக்கங்கள் சிலவற்றுக்குப் பொலிஸ் பாதுகாப்புப் போடப்பட்டுள்ளது. இதன்மூலம் ஆபிரிக்காவுக்கு வெளியே, தண்ணீருக்குப் பொலிஸ் பாதுகாப்பை பலப்படுத்திய நாடாக இலங்கை பதிவானது. »15

கடந்த மூன்று மாதங்களில்

## யாழில் 33 சிறுவர்கள் போதைக்கு அடிமை!

யாழ்ப்பாணம், ஓக. 9
யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கடந்த மூன்று மாதங்களில் 33 சிறுவர்கள் உயிர்கொல்லிப் போதைப்பொருள்களுக்கு அடிமையாகியுள்ளனர். »15

## பாடசாலை வேளைகளிலும் தனியார்கல்விச் செயற்பாடு

### உடன் தடைசெய்ய வேண்டுமென மாவட்டச் செயலரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 9
உயர்தர மாணவர்களுக்கு பாடசாலை வேளைகளில் தனியார் கல்விச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. எனவே இந்த நிலையை விரைந்து இல்லாமல் செய்யவேண்டும் என்று யாழ்ப்பாணம் மாவட்டச் செயலரிடம், »15

## சிறுவர்கள் யாசகமெடுக்க நல்லூரில் தடை விதிப்பு!

யாழ்ப்பாணம், ஓக. 9
நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் பெருந்திருவிழா எதிர்வரும் 21ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில், உற்சவ காலத்தில் சிறுவர்கள் யாசகம் எடுப்பதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. »15









மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பழைய விமானங்களில் விமானிகளுக்குப் பயிற்சி!

### தயாசிறி வருத்தம்

கொழும்பு, ஓக. 9

அருங்காட்சியகத்தில் வைக்கவேண்டிய விமானங்களைப் பயிற்சி நடவடிக்கைக்குப் பயன்படுத்தியமையே திருகோணமலை சீனன்குடா விமான நிலையத்தின் பயிற்சி விமானம் விபத்துக்குள்ளானமைக்குக் காரணம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர நாடாளுமன்றில் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

திருகோணமலை சீனன்குடா விமான நிலையத்தில் நேற்றுமுன்தினம் பயிற்சி விமானமொன்று விபத்துக்குள்ளானதில் விமானிகள் இருவர் உயிரிழந்துள்ளனர்.

விபத்துக்குள்ளான விமானம் 1958 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்டதாகும். அதைத் தயாரிக்கும்போது நாம் பிறக்கக் கூட இல்லை.

சீனாவிலிருந்து கொண்டுவரப்பட்ட இதேபோன்று 6 விமானங்கள் இன்னமும் விமானிகளின் பயிற்சிக்காக பயன்படுத்தப்படுகின்றன. அருங்காட்சியகத்தில் வைக்கப்படவேண்டிய விமானத்தில்தான் விமானிகளுக்குப் பயிற்சியளிக்கப்படுகிறது. இந்தப் பழைய விமானங்களை பயிற்சி நோக்கங்களுக்காகப் பயன்படுத்துவது நியாயமற்றது. அவை அருங்காட்சியகத்திலேயே வைக்கப்படவேண்டியவை.

உயிரிழந்த விமானிகளின் உயிரிழப்பு வருந்தத்தக்கது. இதற்கு அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டும் - என்றார். (ச-இ)



# வாட்டுகின்றது வறட்சி

## நீர்த்தேக்கங்களின் நீர்மட்டங்கள் வெகுவாகக் குறைவு

## குடிதண்ணீருக்கு அந்தரிக்கும் மக்கள்

## நாடு முழுவதும் விவசாயம் பாதிப்பு

கொழும்பு, ஓக.9

**கடந்த சில நாள்களாக மத்திய மலைநாட்டில் கடும் வெப்பம் நிலவுவதால் அங்குள்ள அனைத்து நீர்த்தேக்கங்களின் நீர் மட்டங்களும் வெகுவாகக் குறைந்துள்ளன. மவுசாகல, காசல்ரீ, மேல் கொத்மலை, கென்யோன், லக்ஸபான, பொல்பிட்டிய, நவலக்ஸபான விமலசுரேந்திர ஆகிய நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் வெகுவாகக் குறைந்துள்ளது.**

மவுசாகல நீர்த்தேக்கத்தின் நீர் மட்டம் அதன் கொள்ளளவைவிட 49 அடி நேற்றுச் செவ்வாய்க்கிழமை காலை குறைந்துள்ளது என நீர் மின் நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடும் வெப்பம் நிலவுவதால் குடிதண்ணீர்த் தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது. பெருந்தோட்டப் பகுதிகளில் சுத்தமான குடிதண்ணீரைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலை உள்ளது என்று தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர். இந்தக் காலநிலை தொடரும் பட்சத்தில் பெருந்தோட்டப் பகுதிகளில் உள்ள தொழிலாளர்கள் வேலை இன்றித் தவிக்கும் நிலை உருவாகலாம்.

அதேவேளை, நீர் மின் நிலைய உற்பத்திக்கு நீரை வழங்கும் பிரதான நீர்த்தேக்கமான மவுசாகல நீர்த்தேக்கம் கடந்த ஆண்டு முதல் இன்று வரை மிக மிகக் குறைந்த நீரையே சேமித்துள்ளது. இந்த நீர்த்தேக்கத்திலிருந்து கென்யோன், லக்ஸபான, நவலக்ஸபான, பொல்பிட்டிய, கலுகல ஆகிய நீர் மின்நிலைய மின் உற்பத்திக்காக நீர் வழங்கப்படுகின்றது. மறுபுறத்தில் யாழ்ப்பாணம், குருநாகல், புத்தளம், திருகோணமலை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் ஒரு லட்சம் பேர் குடிதண்ணீர் இன்றிப் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது. வறட்சியான கால நிலையால் நாடுமுழுவதும் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். வில்பத்து தேசிய பூங்காவில் உள்ள சிறிய நீரோடைகளில் நீர் குறைந்துள்ளதால் நீரோடைகளும் பாதிக்கப்பட்டுள்ளன. (எ-இ)

## கொக்குத்தொடுவாய்

## புதைகுழி அகழ்வுக்கு அரசாங்கத்தால் நிதி!

முல்லைத்தீவு, ஓக. 9

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியின் அடுத்தகட்ட அகழ்வு நடவடிக்கைக்கு அரசாங்கம் நிதி கொடுக்கவுள்ளது.

இது தொடர்பான வழக்கு முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் நேற்று எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போதே காணாமற்போனோருக்கான அலுவலகத்தின் ஊடாக இந்தப் புதைகுழியின் அடுத்தகட்ட அகழ்வுக்காக நிதி வழங்கப்படவுள்ள விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. நாளைமறுதினம் புதைகுழி தொடர்பான நில அளவைக் கணிப்புகள் மேற்கொள்ளப்படவுள்ளன. (அ-ம-19)

## சுருதி கூடியதாலேயே தேசியகீதம் பிசகியது

### உமாரா வாக்குமூலம்



கொழும்பு, ஓக. 9

லங்கா பிரிமியர் லீக் கிரிக்கெட் போட்டியின் ஆரம்ப நிகழ்வின் போது தேசிய கீதத்தைத் திரிவுபடுத்தியதாக குற்றஞ் சுமத்தப்பட்ட பாடகி உமாரா சிங்கவன்சவிடம் நேற்றுமுன்தினம் பொது நிர்வாகம் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் விசாரணைப் பிரிவால் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் உமாராவுக்கு மேலதிகமாக, கிரிக்கெட்சபை மற்றும் கல்வி அமைச்சின் பிரதிப் பணிப்பாளர் ஆகியோரிடமும் வாக்குமூலங்கள் பெறப்பட்டன என விசாரணைப் பிரிவின் மேலதிக செயலாளர் தம்மிக்க முத்துகல ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார். "தேசியகீதத்தைப் பாடும்போது 'மஹதா' என்ற வார்த்தையை நான் உச்சரிக்கவில்லை. அதிக சுருதியில் பாடியதால் அது பிசகியுள்ளது" என்று குறிப்பிட்டுள்ள உமாரா, ஊடகங்களில் வெளியான பாடல் எதிரொலியால் 'மாதா' என்ற வார்த்தை 'மஹதா' என பிரசாரம் செய்யப்பட்டிருக்கலாம் என்றும் கூறியுள்ளார். (ச-இ)

## பேருந்து மீது கல்வீச்சு; பெண்ணொருவர் கைது!

யாழ்ப்பாணம், ஓக. 9

பேருந்துக்கு கல்லெறிந்து சேதப்படுத்திய குற்றச்சாட்டில் பெண்ணொருவர் யாழ்ப்பாணம் பொலிஸாரால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் - அச்சுவேலி இடையே சேவையில் ஈடுபடும் தனியார் பேருந்தொன்று யாழ்ப்பாண நகர்ப் பகுதியில் தரித்து நின்றுள்ளது.

அதன்போது குறித்த பெண் பேருந்தின் மீது கல்வீசி பேருந்தைச் சேதப்படுத்தியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கைதுசெய்யப்பட்ட பெண்ணிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் யாழ்ப்பாணப் பொலிஸார் தெரிவித்தனர். (ச-125)

## நுளம்புகளைக் கட்டுப்படுத்துக

சாவகச்சேரி, ஓக.9

சாவகச்சேரி ஆதார மருத்துவமனை வளாகத்தில் நுளம்புத் தொல்லை அதிகரித்துள்ளது என்றும், அதைக் கட்டுப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் விடுதியில் தங்கியுள்ள நோயாளர்களும், பராமரிப்பாளர்களும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இரவுவேளைகளில் நுளம்புத் தொல்லை அதிகமாகக் காணப்படுகின்றது என்றும், அதனால் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

சுகாதாரத் திணைக்களத்தினர் இது தொடர்பாக நடவடிக்கை எடுத்து நுளம்புப் பெருக்கத்தை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-9)

# படகில் ஆஸி. செல்வதற்கு முயற்சி 32 பேருக்கு ஒரு லட்சம் ரூபா தண்டம்

யாழ்ப்பாணம், ஓக.9

சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவுக்கு செல்ல முயன்றபோது பருத்தித்துறைப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட 32 பேருக்குத் தலா ஒரு லட்சம் ரூபா தண்டம் விதித்தது பருத்தித்துறை நீதிமன்றம்.

இந்த வழக்கு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை பருத்தித்துறை நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. சந்தேகநபர்கள் தங்கள் மீதான குற்றச்சாட்டை ஒப்புக்கொண்டதை அடுத்து நீதிமன்றம் தண்டம் விதித்துத் தீர்ப்பளித்தது.

2013ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22 ஆம் திகதி அவுஸ்திரேலியாவுக்குப் படகு மூலம் தப்பிச் செல்ல முன்றபோது பருத்தித்துறைப் பொலிஸாரால் 55 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களுக்கு எதிராகப் பருத்தித்துறை நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு வழக்கு நடைபெற்று வந்தது.

நேற்றுமுன்தினம் இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது நீதிமன்றில் சந்தேகநபர்கள் 32 பேர் முன்னிலையாகியிருந்தனர்.


தங்கள் மீதான குற்றச்சாட்டை ஏற்றுக் கொண்டதை அடுத்து அவர்களுக்குத் தண்டம் விதித்த நீதிமன்று, தண்டத்தைச் செலுத்தத் தவறின் 10 மாத கால சாதாரண சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும் என்று தீர்ப்பளித்தது.

தண்டப்பணத்தை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 7 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்த வேண்டும் என்றும் நீதிமன்று நிபந்தனை விதித்தது. நிபந்தனையுடன் விடுவிக்கப்பட்டவர்களில் ஒன்பது பேர் தண்டப்பணத்தை உடனடியாகச் செலுத்தினர். இந்த வழக்கு அடுத்த மாதம் 7ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. (எ-100)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழக மீனவரை விடுவிக்க இராஜதந்திர நடவடிக்கை!

## தமிழக முதலமைச்சர் ஜெய்சங்கருக்கு கடிதம்



சென்னை, ஓக.9

**இலங்கைச் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மீனவர்களை மீட்டு, இந்தியா அழைத்துவரத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், வெளியுறவுத் துறை அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கருக்கு கடிதம் எழுதியுள்ளார்.**

தமிழகத்தைச் சேர்ந்த 10 மீனவர்கள் நேற்றுமுன்தினம் இலங்கைகடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ள நிலையில், வெளியுறவுத்துறை அமைச்சருக்கு தமிழக முதல்வர் கடிதம் எழுதியுள்ளார்.

கடந்த 30 நாள்களில் மாத்திரம் 3 வெவ்வேறு சந்தர்ப்பங்களில் 34 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். பாரம்பரிய மீன்பிடிப் பகுதியில் மீன்பிடிக்கச் செல்லும் தமிழக மீனவர்கள், இலங்கை கடற்படையினரால் அடிக்கடி கைது செய்யப்படுவது மிகுந்த கவலையளிக்கின்றது என்றும் அவர் தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேவேளை, நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்ட இந்திய மீனவர்களை நாட்டுக்குக் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வலியுறுத்தி இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கருக்கு பாரதிய ஜனதாக் கட்சியின் தமிழகத் தலைவர் கு.அண்ணாமலையும் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார். (ஏ-இ)

# சேமலாப நிதியச் சட்டத்தில் திருத்தம்

கொழும்பு, ஓக.9

ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தில் திருத்தத்தை ஏற்படுத்த ஜனாதிபதி தலைமையில் கூடிய அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

ஊழியர் சேமலாப நிதியத்துக்கான குறைந்தபட்ச வட்டி வீதத்தை 9 சதவீதமாகப் பேணுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 4 ஆண்டுகளுக்கு இந்த வட்டி வீதமே பேணப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஏ-இ)

# பொதுப்போக்குவரத்தை சீர்செய்ய 'ஜி.பி.எஸ்', 'ஈ–ரிக்கெற்' வசதி

*2048 இல் மின்சாரப் பேருந்துகள்*
*போக்குவரத்து அமைச்சு திட்டம்*

கொழும்பு, ஓக. 9

நாட்டின் பொதுப்போக்குவரத்துத் துறையில் நீண்டகாலமாக நிலவும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்க தேசிய போக்குவரத்துக் கொள்கையொன்றை உருவாக்கி 'ஜி.பி.எஸ்' மற்றும் 'ஈ-ரிக்கெற்' வசதிகளை அறிமுகப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது என்று போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.


போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சர் பந்துல குணவர்த்தன, போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன, ஜனாதிபதியின் செயலாளர் போக்குவரத்து அமைச்சின் செயலாளர் ஆகியோரின் பங்குபற்றலுடன் நேற்றுமுன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் கலந்துரையாடலொன்று இடம்பெற்றது.

அதில் பயணிகள் போக்குவரத்துத்துறையில் எதிர்நோக்கப்படும் பிரச்சினைகள் குறித்து ஆராயப்பட்டதுடன் நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி போக்குவரத்துத் துறையில் உயர்தரத்தை ஏற்படுத்த நடவடிக்கை எடுப்பதன் அவசியம் குறித்து வலியுறுத்தப்பட்டது.

அந்தவகையில் பயணச்சீட்டு கொள்வனவு பிரச்சினைகளைத் தவிர்க்க 'ஈ-ரிக்கெற்' முறை முன்மொழியப்பட்டது. அதற்கு நிதியமைச்சு அனுமதி வழங்கியது.

இந்த முறைமை தொடர்பாக மாகாண மட்டத்தில் விரைவில் கருத்துகள் பெறப்படும் என இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன குறிப்பிட்டார்.

எதிர்காலத்தில் பேருந்துகளுக்கான அனுமதிப்பத்திரங்களை வழங்குவதில் 'ஜி.பி.எஸ்.' தொழில்நுட்பம் முக்கியமான அளவுகோலாகக் கருதப்படும். 2048 ஆம் ஆண்டளவில் பொதுப் பயணிகள்போக்குவரத்துசேவையில் மின்சாரப் பேருந்துகளை இணைக்க எதிர்பார்க்கப்படுகிறது. பூர்வாங்க நடவடிக்கைகள் அடுத்த சில மாதங்களில் ஆரம்பிக்கப்படும் என்று போக்குவரத்து அமைச்சர் குறிப்பிட்டார். (ச-26)




# இன்சுலின் தட்டுப்பாடு: நோயாளர்கள் அவதி!

அரச மருத்துவமனைகளில் இன்சுலின் மருந்துக்குத் தட்டுப்பாடு நிலவி வருகின்றது என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது. அதன் காரணமாக நோயாளர்கள் அவற்றைப் பணம் செலுத்தி கொள்வனவு செய்ய வேண்டி ஏற்பட்டுள்ளது.

மிகக் குறைந்தளவானவர்களுக்கே இன்சுலின் மருந்தை பணம் செலுத்தி பெற்றுக் கொள்ளக் கூடிய இயலுமை காணப்படுகிறது.

அதனால் நாட்டில் நீரிழிவு நோயாளர்களின் நோய் நிலைமை தீவிரமடைந்து வருகின்றது.

எனவே அரசாங்கம் இதுதொடர்பில் உடன் கவனம்செலுத்தி நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் மருத்துவர் சமில் விஜேசிங்க குறிப்பிட்டார். (ஏ-இ)




**வ**ன்னிப்பக்கம் இப்ப கொஞ்சக் காலமா யானையளின்ர அட்டகாசம் கூடிப்போட்டுது. முந்தியெண்டால் காட்டுக்குக் கிட்ட உள்ள ஊர் மனைக்குள்ள தான் யானையள் வந்து வாழை, தென்னையை முறிச்சு விழுங்கிப் போட்டுப் போகுங்கள். இப்ப என்னடாவெண்டால் காட்டில இருந்து இருபது முப்பது மைலுக்கு அங்கால உள்ள ஊருக்கையெல்லாம் யானையள் வருகுது. அதைவிட இன்னொரு பிரச்சினை என்னெண்டால், முந்தி ஒரு சீனவெடியைக் கொளுத்தி எறிஞ்சாலே யானையள் வெருண்டுபோய் ஓட்டமெடுக்குங்கள். இப்ப சீனவெடியைக் கோர்வையாக் கொளுத்திப் போட்டாலும் அதை மிதிச்சுக் கொண்டு வந்து எல்லாத்தையும் நாசமாக்கிப் போட்டுத்தான் போகுதுகள்.

இந்த யானையளுக்குப் பின்னாலையும் சிங்களவர்தான் இருக்கினமெண்டால் நம்புவீங்களோ? நாய்க்கு எங்க கல்லெறி பட்டாலும் காலைத் தூக்கிறமாதிரி, இஞ்ச ஏதும் கெட்டது நடந்தால் உடன சிங்களவரில பழி போடுறம் எண்டு நினைப்பியள். ஆனால் உண்மையைச் சொன்னால் நீங்களும் சரியெண்டு சொல்லுவியள்.

இப்ப சிங்கள ஏரியாப் பக்கம் நிண்ட கன வளர்ப்பு யானையளை அவையளால வைச்சுச் சமாளிக்க முடியேலை. யானையளுக்குச் சாப்பாடு போடுறது, குளிக்க வார்க்கிறது எண்டு அதுகளைக் கட்டி அவிக்கிறது பெருஞ் சிலவுதானாம். அதோட யானைப்பாகனுக்கும் புறிம்பாச் சம்பளம் குடுக்க வேணும். உதுகளால இப்ப விகாரையள், வீடுகளில வளர்த்த யானையளை 'நைசா' பெரிய கென்டய்னர்ல ஏத்திக் கொண்டந்து வன்னிப்பக்கக் காடுகளில விட்டுட்டுப் போகினம். கூடுதலா இரவு நேரத்தில இப்பிடியான சில கென்டய்னர்கள் வன்னிக்காடுகளுக்குக் கிட்டடியில வந்துபோன பிறகுதான் யானையளின்ர தொல்லையும் கூடி இருக்கு. விகாரையில வளர்ந்ததாலதான் அதுகள் வெடி போட்டும் பயப்பிடாமல் வருகுதுகள். அதோட சில யானையளின்ர காலில மணியும் கட்டுப்பட்டிருக்கு. சனங்களோட வளர்ந்த இந்த யானையளுக்கு காட்டுக்க இருக்க ஏலாது. அதால தான் சனங்கள் இருக்கிற இடமா வந்து சாப்பாட்டுக்கு அலையுதுகள். அதோட உந்த யானையள் தங்களை வளர்த்தவையைக் காணாததால கோபப்பட்டு, மதம் பிடிச்சு அது இறங்காமல் அலையிறதால கண்ணில அகப்படுறவையையும் தூக்கி மிதிச்சுப் போட்டுத்தான் மற்ற வேலையாம்.

குண்டு போட்டு அழிச்ச காலம் போய் இப்ப அந்தக்காலம் மாதிரி யானையளை ஏவிவிட்டும் அழிக்கத் தொடங்கிட்டாங்கள்.



- பட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலநிலை மாற்றங்களால் உலக பொருளாதாரம் வீழும்

## அச்சுறுத்தும் ஆய்வு முடிவுகள்



நியூயோர்க், ஓக.9

**காலநிலை மாற்றத்தால் ஏற்படும் பொருளாதார வீழ்ச்சியானது உலகின் பல நாடுகளைப் பாதிக்கக்கூடும் எனவும், கார்பன் மாசு உமிழ்வுகள் அதிகரிப்பானது இன்னும் ஒரு தசாப்தத்துக்குள் 59 நாடுகளின் கடன் சேவை செலவுகளை அதிகரிக்கச் செய்யும் எனவும் புதிய ஆய்வொன்று தெரிவித்துள்ளது.**

உலகின் மிகப் பெரிய பொருளாதார நாடுகளான சீனா, இந்தியா, அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளின் கடன் மதிப்பீடுகளும் இதனால் கீழ் இறக்கப்படலாம் என ஆய்வாளர்கள் எச்சரித்துள்ளனர்.

நாடுகளின் கடன் வாங்கலுக்கான செலவுகள் அதிகரிப்பால் இதன் விளைவுகள் கடுமையானதாக இருக்கும் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது. அண்மையில் வெளிவந்த, 'மெனேஜ்மென்ட் சயன்ஸ்' சஞ்சிகையில் இந்தவிடயங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

காலநிலை மாற்றத்தால் பொருளாதாரத்துக்கு ஏற்பட்ட பாதிப்புகள் ஏற்கனவே தெளிவாகவுள்ளன. உலகளாவிய உற்பத்தியை அண்மைக்கால வெப்ப அலைகள், 0.6 சதவீதத்தால் குறைத்துள்ளன என்று மதிப்பிடப்பட்டுள்ளது

உலகின் சராசரி வெப்பநிலை அதிகரிப்பை 2 பாகை செல்சியஸுக்குள் பேணுவது என்ற, பாரிஸ் காலநிலை ஒப்பந்த இலக்கை உலகம் அடைந்துகொண்டால், நாடுகளின் கடன்தரப்படுத்தல் மதிப்பீடுகளுக்கு குறுகிய கால மற்றும் நீண்டகால நோக்கில் சிறிய தாக்கங்களே ஏற்படும் என்றும் ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, தற்போதைய பூகோள போக்குகளில் மாற்றத்தை ஏற்படுத்தாவிட்டால், 2050 ஆம் ஆண்டில் இலங்கை தனது வருடாந்த மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1.2 வீதம் வீழ்ச்சியை காணும் எனவும் இந்த நூற்றாண்டின் இறுதியில் அது 6.5 வீதமாக அதிகரித்துவிடும் எனவும் தெற்காசியாவுக்கான காலநிலை மற்றும் பொருளாதாரம் தொடர்பாக ஆசிய அபிவிருத்தி வங்கி 2014 ஆம் ஆண்டு வெளியிட்ட அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால், காலநிலை மாற்றத்தை தணிக்கச் செய்வதற்கான உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டால், அந்தப் பாதிப்பை 1.4 வீதமாக குறைத்துவிடலாம் எனவும் இலங்கையின் அண்மைக்கால பொருளாதார நெருக்கடிநிலைக்கு முன்னர் வெளியிடப்பட்ட மேற்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இலங்கையின் பரந்துபட்ட கரையோரப் பிரதேசத்தில், மீன்பிடிக்கு கணிசமான பாதிப்பு ஏற்படுவதுடன், கடுமையான அலைகள், நீர் மட்டம் உயர்தல் ஆகியவற்றால் கரையோர உயிர்த் தொகுதியும் பாதிக்கப்படும். இதனால், யாழ்ப்பாணம், மற்றும் கம்பஹா பகுதிகள் மிகவும் மோசமாகப் பாதிக்கப்படும் எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. (எ-இ)

# அமெரிக்காவை புரட்டிய புயல்!

நியூயோர்க், ஓக.9

மத்தியஅட்லாண்டிக் பெருங்கடலில் உருவான புயல் அமெரி... மின் 10 மாகாணங்களில் கடு... பாதிப்பை ஏற்ப... ளது.

அ... தலைநகர் வொஷிங்டன் மற்றும் நியூ... ன்னிசி, பிலடெல்பியா, அரிசோனா, நியூ... உட்பட 10 மாகாணங்கள் புயலால் பாதிப்ப... ளன.

...ற்றுக் காரணமாக மரங்கள், மின் கம்பங்கள் ...விழுந்துள்ளன. மின் தடை காரணமாக 10 லட்சம்... கள் இருளில் மூழ்கின. பல இடங்களில் வெள்ளம் கரை புரண்டு ஓடுகின்றது. புயலால் மின்சாரம் துண்டிக்கப்பட்டது. சூறாவளி, ஆலங்கட்டி மழை, மின்னல் உள்ளிட்ட அபாயங்கள் இருப்பதால் மக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. புயல் மற்றும் மழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்புப் பணிகள் நடந்து வருகின்றன என்று அந்த நாட்டு அதிகாரிகள் தெரிவித்தனர். (எ-இ)

# அகதிகளின் படகு கவிழ்வு: 16 பேர் சாவு, பலர் மாயம்!

லண்டன், ஓக.9

துனிசியா மற்றும் மேற்கு சஹாரா கடற்கரையில் ஏற்பட்ட கப்பல் விபத்தில் அகதிகள் 16 பேர் உயிரிழந்துள்ளனர்.

வட ஆபிரிக்கக் கடற்கரையின் பெரும்பகுதி புலம்பெயர்ந்தோர் மற்றும் புகலிடக் கோரிக்கையாளர்களுக்கான பிரதான நுழைவாயிலாக மாறியுள்ளது. ஆபிரிக்காக் கண்டத்தின் பிற பகுதிகளில் இருந்து அகதிகள் படகுகளில் ஆபத்தான முறையில் ஐரோப்பா நோக்கிப் பயணிக்கின்றனர்.

விபத்துக்குள்ளான கப்பலில் மொத்தம் 57 பேர் பயணம் செய்துள்ளனர். 16 பேர் உயிரிழந்துள்ள நிலையில், 44 பேரை தேடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இருவர் மீட்புக்குழுவால் மீட்கப்பட்டுள்ளனர். (எ-இ)

# நிலவுக்கு விண்கலம் அனுப்ப கிராமத்தை காலி செய்த ரஷ்யா

மொஸ்கோ, ஓக.9

நிலவுக்கு விண்கலத்தை அனுப்புவதற்காக கிராமம் ஒன்றிலிருந்த மக்கள் அனைவரையும் வெளியேற்றுகின்றது ரஷ்யா.

உலகின் முன்னணி நாடுகள், நிலவில் உள்ள வளங்களைக் கண்டறிவது உட்படப் பல காரணங்களுக்காக நிலவுக்கு விண்கலங்களை அனுப்பி ஆய்வுகள் நடத்துகின்றன.

1959 ஆம் ஆண்டிலிருந்து 1976ஆம் ஆண்டுவரை ரஷ்யா நிலவுக்கு ரோபோ விண்கலங்களைத் தொடர்ச்சியாக அனுப்பி வந்தது. அவற்றில் 15 முயற்சிகள் ரஷ்யாவுக்கு வெற்றியளித்தன. ரஷ்யாவின் லூனா எனும் இந்தத் திட்டம், மேற்கத்திய நாடுகளால் லூனிக் என அழைக்கப்படுகிறது.

தற்போது சுமார் அரை நூற்றாண்டு கழித்து மீண்டும் நிலவுக்கு விண்கலம் அனுப்பும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது ரஷ்யா. அதற்காக தனது நாட்டின் கிழக்கில் உள்ள ஒரு கிராமத்தை ரஷ்யா காலி செய்கின்றது.

நிலவுக்கு அனுப்பப்படவுள்ள லூனா 25 எனப்படும் லேண்டர் விண்கலம், தலைநகர் மொஸ்கோவுக்கு கிழக்கே சுமார் 5 ஆயிரத்து 550 கிலோமீற்றர் தொலைவில் உள்ள வோஸ்டோச்னி காஸ்மோட்ரோம் எனும் ஏவுதளத்தில் இருந்து ஏவப்படும் என்று அந்தநாட்டின் ரோஸ் கோஸ்மோஸ் விண்வெளி நிறுவனம் தெரிவித்துள்ளது.

லூனா25 லேண்டர் விண்கலத்தை சோயுஸ்2 ஃப்ரிகாட் எனும் ரொக்கெட் பூஸ்டர் சுமந்து செல்லும். விண்கலத்தை தாங்கிச் செல்லும் ரொக்கெட்டிலிருந்து பூஸ்டர்கள் பிரிந்த பின்னர் அவை விழும் இடங்கள் கணிக்கப்பட்டு, பாதுகாப்புக் கருதி மக்கள் கிராமத்தில் இருந்து வெளியேற்றப்படுகின்றனர் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

நிலவின் தென் துருவம் நோக்கிச் செல்லும் ரஷ்யாவின் முதல் விண்கலமான இந்த விண்கலம், ஒரு வருட காலம் நிலவில் தங்கி, நிலவில் நீர்நிலைகளின் சாத்தியக்கூறுகள் குறித்தும், வளங்கள் மற்றும் கட்டமைப்புக் குறித்தும் தகவல்களை வழங்கும். (ஏ-இ)

# இன்றைய (ராசிபலன்)



**மேடம்:** மனதில் இருந்த குழப்பங்கள் விலகும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உறவினர்களால் ஓரளவு அனுகூலம் ஏற்படும். மகிழ்ச்சி வரும்.

**இடபம்:** உறவினர்கள் வருகையால் அதிகப்படியான செலவுகள் ஏற்படும். போதுமான பணம் இருப்பதால் சமாளித்து விடுவீர்கள். மற்றவர்களுடன் மனஸ்தாபம் ஏற்படக்கூடும்.

**மிதுனம்:** நன்மைகள் நடைபெறும் நல்ல நாள். இன்று நீங்கள் தொடங்கும் புதிய முயற்சி சாதகமாக முடியும். உறவினர்களால்காரிய அனுகூலமாகும். எதிர்பார்த்த லாபம் கிடைக்கும்.

**கடகம்:** ஆதாயம் கிடைக்கும். காரியங்கள் அனுகூலமாக முடியும். உறவினரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**சிம்மம்:** உற்சாகமான நாள். தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படும். பிள்ளைகள் கேட்டதை வாங்கித் தருவீர்கள். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. முயற்சி சாதகமாக முடியும்.

**கன்னி:** புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். குடும்பத்தில் உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும். பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**துலாம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவுகளை எடுக்கலாம். செலவுகள் ஏற்படும். முயற்சிகள் வெற்றிகரமாக முடியும்.

**விருச்சிகம்:** எதிர்பாராத பணவரவுடன், திடீர் செலவுகளும் ஏற்படும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகும்.

**தனுசு:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். ஆதாயம் உண்டாகும். பெருமை ஏற்படும்.

**மகரம்:** தேவையான பணம் கையில் இருந்தாலும், தேவையற்ற செலவுகளும் ஏற்படக்கூடும். உங்கள் முயற்சிகளுக்கு வாழ்க்கைத்துணை ஆதரவாக இருப்பார். எதிர்பார்த்தபடி லாபம் உண்டாகும்.

**கும்பம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. பிள்ளைகளின் குடும்பம் தொடர்பான முடிவு எடுப்பதில் ஆலோசனை அவசியம்.

**மீனம்:** எடுத்த காரியங்களில் வெற்றி உண்டாகும். மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். மகிழ்ச்சி உண்டாகும். விற்பனையும் லாபமும் அதிகரிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

யாழ்ப்பாணம், ஓக. 9

வட இலங்கை சமாதான நீதிவான்கள் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகிகள் தெரிவும் எதிர்வரும் 19 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கோண்டாவில் இராஜேஸ்வரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தலைவர் சமாதான நீதிவான் லயன் கலாநிதி கா.பீ. ஜெயவிந்தன் தலைமையில் நிகழ்வு இடம்பெறும்.

கூட்டத்தில் அனைத்து சமாதான நீதிவான்களையும் பங்கேற்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-ரி2-9)

## சின்னஞ்சூட்டும் நிகழ்வு

சாவகச்சேரி, ஓக.9

மிருசுவில் விடத்தற்பளை கமலாசனி வித்தியாலய மாணவர்களுக்கு சின்னஞ்சூட்டும் நிகழ்வு இன்று புதன்கிழமை காலை 8.00 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும்.

அதிபர் இ.நாகேந்திரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட மனிதவலு அபிவிருத்தி இணைப்பாளர் சி.சிவயோகன் கலந்துகொள்ளவுள்ளார். (எ-9)

## புத்தக அறிமுக நிகழ்வு

யாழ்ப்பாணம், ஓக.9

செல்வி திருச்சந்திரன் எழுதிய 'இலங்கையின் வடபுலத்தில் சாதியமும் அதன் பன்முக வெளிப்பாடுகளும்' எனும் தலைப்பிலான புத்தக அறிமுகமும் கலந்துரையாடல் நிகழ்வும் எதிர்வரும் சனிக்கிழமை மாலை 4 மணியளவில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கு அருகில் அமைந்துள்ள தந்தை செல்வா கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. சகவாழ்வுக்கான யாழ்ப்பாண மக்கள் ஒன்றியத்தினரின் ஏற்பாட்டில் இடம்பெறவுள்ள நிகழ்வில் மயில்வாகனம் சூரிய சேகரம், நவரட்ணம் உதயணி. ச.தனுஜன், அகல்யா பிரான்சிஸ் கிளைன் ஆகியோர் பேச்சாளர்களாக கலந்துகொண்டு கருத்துரைகள் ஆற்றவுள்ளதுடன் செல்வி திருச்சந்திரன் ஏற்புரையை வழங்குவார். (எ-66)

## வடக்கு ஆளுநர் மக்கள் சந்திப்பு நாளை இல்லை

யாழ்ப்பாணம், ஓக.9

பொதுமக்கள் நாளை வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸைச் சந்திக்க முடியாது என்று ஆளுநர் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஆளுநர் நாளை வியாழக்கிழமை செயலகத்தில் இல்லாத காரணத்தால் அவரைச் சந்திக்க முடியாது என்றும் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (எ-26)




சொத்துக்கள் | கடன்கள் மற்றும் முற்பணங்கள் | வைப்புகள் | வணிகநாமப் பெறுமதி

ஐக்கிய இராச்சியத்தின் The Banker சஞ்சிகை 2023 ஆம் ஆண்டின் உலகின் அதிசிறந்த 1,000 வங்கிகளுள் ஒன்றாக இலங்கையிலிருந்து இலங்கை வங்கியை மட்டும் தெரிவுசெய்து கௌரவித்துள்ளது. இப்பெரு வெற்றியின் பின்னணியில் பக்கபலமாக எம்மோடு என்றும் இணைந்திருக்கும் உங்களுக்கு எமது நன்றிகள்.

1975 BOC CALL CENTRE www.boc.lk

தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.

இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

## இலத்திரனியல் கழிவுகள் சேகரிப்பு வாரம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஓக. 9

'சுற்றாடலை பாதுகாத்து முகாமைத்துவம் செய்தல்' எனும் தொனிப்பொருளின் கீழ் இலத்திரனியல் கழிவுகளைச் சேகரிக்கும் செயற்றிட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

அந்தவகையில் நேற்றுமுன்தினம் 7ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் 11ஆம் திகதிவரையான காலப்பகுதியை இலத்திரனியல் கழிவுகளை சேகரிக்கும் வாரமாக சுற்றாடல் அதிகாரசபை பிரகடனப்படுத்தியுள்ளது.

இந்த வாரத்தில் பொதுமக்கள் மற்றும் திணைக்களங்களிலிருந்து இலத்திரனியல் கழிவுகள் சேகரிக்கப்படவுள்ளன என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-125)

## மஞ்சவனப்பதி மஹோற்சவம்

யாழ்ப்பாணம், ஓக. 9

கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலய மஹோற்சவப் பெருவிழா எதிர்வரும் 13ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 18 தினங்கள் இருவேளை உற்சவம் நடைபெறும்.

எதிர்வரும் 29ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் 30ஆம் திகதி புதன்கிழமை தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளன என ஆலய நிர்வாகம் தெரிவித்துள்ளது. (ச-ரி2- 66)

## கந்தானை தீ விபத்தால் மாணவர்கள் பாதிப்பு!

கொழும்பு, ஓக. 9

கந்தானை இரசாயன தொழிற்சாலையில் நேற்று செவ்வாய்க்கிழமை ஏற்பட்ட தீ விபத்தால் அயற் பாடசாலை மாணவர்கள் 102 பேர் சுகவீனமுற்ற நிலையில் ராகம மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சுத்திகரிப்புக்கு பயன்படுத்தப்படும் இரசாயனங்கள் தீயில் எரிந்து பரவியதால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. இந்தத் தீ விபத்தில் தொழிற்சாலையின் முகாமையாளர் உயிரிழந்துள்ளார்.

கம்பஹா மற்றும் நீர்கொழும்பு தீயணைப்புப் பிரிவுகள், கடற்படையின் தீயணைப்புப் பிரிவு ஆகியவை இணைந்து தீயைக் கட்டுக்குள் கொண்டு வந்துள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-ரி2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூளாய் மருத்துவமனைக்கு 2 அம்புலன்ஸ்கள் ஜப்பான் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 9

மூளாய் கூட்டுறவு மருத்துவ மனைக்கு 2 அம்புலன்ஸ் வண்டிகள் கையளிக்கப் படவுள்ளன.

ஜி.ஜி.பி. திட்டத்தின்கீழ் ஜப்பான் மக்களால் இந்த அம்புலன்ஸ்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டன. அவற்றை இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் நாளை வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு மருத்துவமனைப்பணிப்பாளரிடம் கையளிக்கவுள் ளார். (ச-ரி2)

## போலி மருத்துவர்கள் நாட்டில் அதிகரிப்பு!

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 9

நாடு முழுவதும் அதிகளவான போலி மருத்துவர்கள் சிகிச்சையளித்து வருகின்றனர் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் குற்றஞ்சுமத்தியுள்ளது. இது தொடர்பில் அதன் ஊடகப் பேச்சாளர் மருத்துவர் சமில் விஜேசிங்க கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சந்திப்பில் தெரிவித்ததாவது:

நாடு முழுவதும் சுமார் 40 ஆயிரத்துக்கும் அதிகமான போலி மருத்துவர்கள் சேவையாற்றி வருகின்றனர்.

பல பிரிவுகளை பிரதிநிதித்துவப்படுத்தும் அவர்கள் எந்தவொரு தகைமையும் இன்றி நோயாளர்களுக்கு சிகிச்சையளிக்கின்றனர். இதுவொரு பாரதூரமான விடயமாகும். இந்த விடயம் தொடர்பில்பல்வேறு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன - என்றார். இதே வேளை பொருளாதார நெருக்கடியில் பாதிப்புற்றுள்ள எமது நாட்டின் வரிக்கொள்கையில் அதிருப்தியுற்று மருத்துவர்கள், மருத்துவ நிபுணர்கள் எனப் பலர் வெளிநாடுகளுக்கு வெளியேறி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## பொதுக்கூட்டமும் நிர்வாகத்தெரிவும்

கைதடி நுணாவில் கமக்கார அமைப்பின் பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும் கைதடி நுணாவில் குமரகுருபரன் முன்பள்ளியில் (பழைய இடம்) இன்று 9ஆம்திகதி புதன்கிழமை மாலை 3 மணிக்கு கமநல சேவை திணைக்களத்தின் பெரும்பாக உத்தியோகத்தர் அருள்நேசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

கமக்கார அமைப்பின் உறுப்பினர்கள் அனைவரையும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொண்டுள்ளனர். (ய)

**வீடு வாடகைக்கு**

மணற்தறை லேன் 44/10, யாழ்ப்பாணத்தில் 9 அறைகளுடன் 2 மாடி நவீன வீடு உடனடியாக வாடகைக்கு உண்டு.

**076 221 6387, 077 104 1606**

**தேவை**

யாழ்ப்பாண மாவட்ட தோட்டக் குடிலில் தங்கியிருந்து தோட்ட வேலை செய்யப் படித்த இளைஞர் தேவை. சம்பளம் பேசி முடிவு செய்யப்படும்.

**071 858 4882** (CS/51562) AH-1

**தேவை**

தோட்ட வேலை தெரிந்தவர் தேவை. தங்கி நின்று வேலை செய்வது விரும்பத்தக்கது. (40 வயதுக்கு மேற்பட்டவர்கள்) சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

**077 344 5721** (CR/40383)AH-1

**தவறவிடப்பட்டது**

கடந்த மாதம் 03.07.2023 அன்று கிளிநொச்சிக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் சாரதி அனுமதிப்பத்திரத்துடன் சிறிய கைப்பை தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தந்து உதவுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**பெயர் - சிவலோஜினி கமலராஜன்**

சன்மானம் வழங்கப்படும்.

**077 949 2910**

**வீடு வாடகைக்கு**

Jaffna Hindu College அருகில் 3 அறைகள் Attached Bathroom உடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.

**வாடகை - 30,000/-**

Advance - 300,000/-

**076 745 5282** (CS/24997)AH-1

## கேள்விஅறிவித்தல்
## சபை நிதி - 2023
## துணுக்காய் பிரதேசசபை, துணுக்காய்

1. இலங்கை சனநாயக சோசலிச குடியரசினது மாகாண சபை நிதியின் ஒரு பகுதி கீழ் காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட திட்டங்களிற்கு பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.
2. தலைவர். பெறுகைக்குழு **துணுக்காய் பிரதேசசபை. முல்லைத்தீவு.** அவர்களினால் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரசுக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட கட்டுமான வேலைகளுக்காக கோருகின்றார்.
3. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட 4/2016(1) இலக்க 16.03.2016ம் திகதிய நிதிச்சுற்றறிக்கைக்கு அமைவாக வடக்கு மாகாணத்தை சார்ந்தவர்களுக்கும் மற்றும் வேண்டப்படும் உரியதரத்தை கொண்டிருப்போருக்கும் முன்னுரிமையளிக்கப்படும்.
4. கேள்வி பெறத்குதியுடையவராவதற்கு. வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும். அட்டவணையிற் காட்டியபடி (வீதி) பொருத்தமானதரத்தில் ICTAD/CIDA பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.
5. தேவையான தகைமைகள். கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தலைவர். **பெறுகைக் குழு. துணுக்காய் பிரதேச சபை. துணுக்காய் (தொலைபேசி இல:-021 228 4532/ 021 228 4926 E-mail:psthunukkai@gmail.com** இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09.00 மணி முதல் மாலை 14.00 மணிவரை கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
7. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் தலைவர். பெறுகைக்குழு துணுக்காய் பிரதேச சபை. துணுக்காய் எனும் இடத்திலிருந்து 09.08.2023 ம் திகதியிலிருந்து 22.08.2023 ம் திகதி வரை காலை 09.00 மணிக்கும் மாலை 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.3000 செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத் தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.
8. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து **தலைவர் பெறுகைக்குழு துணுக்காய் பிரதேச சபை. துணுக்காய்** எனும் முகவரிக்கு 23.08.2023 ம் திகதி மாலை 14.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்படவேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது. கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரா/ கேள்விதாரரின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
9. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| ஒப்பந்த இலக்கம் | வேலைவிபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியனில்.) | ஒப்பந்த காலம் | வேண்டப் படும் தரம் | கேள்வி பிணை வைப்பு (ரூபா | கேள்வி செல்லுபடியா கும் காலம் | கேள்வி பிணை செல்லுபடி யாகும் காலம் |
|---|---|---|---|---|---|---|---|
| NP/14/44(05)/02/ Council(05)/2023 | Improvements of Therankandal Road (Therankandal Ramar Kovil Road) | 1.456Mn (வரிநீங்கலாக) | 02 மாதங்கள் | C9 and C8 (வீதி) | 15,000.00 | 11.10.2023 | 08.11.2023 |
| NP/14/44(05)/02/ Council(06)/2023 | Improvements (Mettaling and Tarring) of Kalvilan 2nd Lane | 1.456Mn (வரிநீங்க லாக) | 02 மாதங்கள | C9 and C8 (வீதி) | 15,000.00 | 11.10.2023 | 08.11.2023 |
| NP/14/44(05)/02/ Council(07)/2023 | Construction of Kalvilan Kovil Road (Concrete) | 1.120Mn (வரிநீங்கலாக) | 45 நாட்கள் | C9, and C8 (வீதி) | 11,000.00 | 11.10.2023 | 08.11.2023 |
| NP/14/44(05)/02/ Council(08)/2023 | Renovation (Gravelling) of Mangainagar 9th Lane(Mallavi North Pre School Road), Renovation (Gravelling) of Mallavi North Thekkangkadu 2nd Cross Road), Renovation (Gravelling) of Therankandal 5th Cross Road(Therankandal Nagapushani Amman Road), Renovation (Gravelling) of Therankandal 5th Lane (Selvarasa shop Lane) | 1.739Mn (வரிநீங்கலாக) | 45 நாட்கள் | C9, and C8 (வீதி) | 17,000.00 | 11.10.2023 | 08.11.2023 |
| NP/14/44(05)/02/ Council(09)/2023 | Renovation (Gravelling) of Thenniyankulam Puvi Road, Renovation (Gravelling) of Thenniyankulam 4th Lane, Renovation (Gravelling) of Thenniyankulam 3rd Lane | 1.747Mn (வரிநீங்கலாக) | 45 நாட்கள் | C9 and C8 (வீதி) | 17,000.00 | 11.10.2023 | 08.11.2023 |

10. சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை முழுமையாக அல்லது பகுதியாக நிராகரிக்கவோ. மீள்கேள்வி கோரவோ பெறுகைக் குழுத் தலைவருக்கு பூரண அதிகாரம் உண்டு.

**தலைவர்.**
**பெறுகைக்குழு,**
**துணுக்காய் பிரதேச சபை, முல்லைத்தீவு**
**வடமாகாணம்**
**09.08.2023**

(CR/40386 )AH-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## வெப்பமும் விடவில்லை எம்மை!

பனையில் இருந்து வீழ்ந்தவ[illegible]மாடேறி மிதித்த கதையாக, பொருளாதார நெருக்கடி[illegible]விக்கும் இலங்கையை இயற்கையும் சோதிக்க ஆரம்[illegible]க்கின்றது. தற்போது நிலவும் வறட்சியான காலநிலை[illegible]காலத்தில் ஏற்படுத்தப்போகும் பாதிப்புகள் சாதா[illegible]னவையாக இருக்கப்போவதில்லை. நாட்டின் [illegible]ரு[illegible]ாதாரம் ஆட்டம் கண்டிருக்கும் இந்த நேரத்தில் அ[illegible]லிருந்து மீண்டுவருவதற்கு இலங்கை பெரும் பிரயத்த[illegible]ங்களை மேற்கொண்டிருக்கின்றது. சர்வதேச நிதி உதவிக[illegible] மூலம் இலங்கை தற்போது தன்னை ஆசுவாசப்படுத்திக்கொண்டுள்ளபோதும், இன்னமும் ஆபத்துக்கட்டத்தைத் தாண்டி வரவில்லை. இந்தப் பின்னணியில் நாட்டில் இப்போது காணப்படும் வறட்சியின் விளைவுகள் நாட்டின் பொருளாதாரத்தில் பெரும் தாக்கங்களைச் செலுத்தும் என்பது நிதர்சனமான உண்மை.

நாட்டில் தற்போதுள்ள வறட்சியான காலநிலையால் நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் நாளுக்கு நாள் சடுதியாகக் குறைந்து வருகின்றது. வடக்கு உட்பட நாட்டின் பிரதான நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் அபாய நிலைமை வருமளவுக்கு வற்றிவிட்டன. நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் குடிதண்ணீர்ப் பிரச்சினை தலைதூக்க ஆரம்பித்திருக்கின்றது. விவசாய நடவடிக்கைகளும், மின் உற்பத்தியும் கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளன. விவசாயத்துக்கு நீரை வழங்கினால், மின் உற்பத்தியை நிறுத்த வேண்டிய நிலைமை அரசாங்கத்துக்கு ஏற்பட்டிருக்கின்றது. நாடாளுமன்றத்தில் நேற்றுக் கருத்துத் தெரிவித்த மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர, தற்போதைய நிலைமையால் மின் வழங்கலில் நெருக்கடிகளை எதிர்கொள்ள நேரிடும் என்று ஒப்புக்கொண்டிருக்கின்றார். மீண்டும் மின்வெட்டுகள் நடைமுறைப்படுத்தப்படலாம் என்றும் கூறியிருக்கின்றார். நாட்டில் மீண்டும் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்பட்டால் அவை பொருள்கள், சேவைகளின் கட்டணங்களிலும் நேரடியான தாக்கத்தை ஏற்படுத்தும்.

தற்போதைய பூகோளப் போக்குகளில் மாற்றத்தை ஏற்படுத்தாவிட்டால், 2050 ஆம் ஆண்டில் இலங்கை தனது வருடாந்த மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1.2 வீதம் வீழ்ச்சியைக் காணும் எனவும் இந்த நூற்றாண்டின் இறுதியில் அது 6.5 வீதமாக அதிகரித்துவிடும் எனவும் தெற்காசியாவுக்கான காலநிலை மற்றும் பொருளாதாரம் தொடர்பாக ஆசிய அபிவிருத்தி வங்கி 2014 ஆம் ஆண்டு வெளியிட்ட அறிக்கையொன்றில் எதிர்வுகூறியிருந்தது. காலநிலை மாற்றத்தைத் தணிக்கச் செய்வதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டால் அந்தப் பாதிப்பைக் குறைக்கமுடியும் என்றும் ஆலோசனை வழங்கியிருந்தது. விசேடமாக இந்த நிலைமையால் யாழ்ப்பாணம் மற்றும் கம்பஹா ஆகிய பகுதிகளே அதிகம் பாதிக்கப்படும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.


இந்த முன்னெச்சரிக்கைகளை உதாசீனம் செய்ததன் விளைவுகளை இப்போது இலங்கை அனுபவிக்க ஆரம்பித்திருக்கின்றது. நாட்டின் நீர்மின் உற்பத்தி கேள்விக்குள்ளாகியிருக்கின்றது. நாடளாவிய ரீதியில் தற்போது வறட்சியால் சுமார் 5 லட்சம் மக்கள் பாதிப்படைந்திருக்கும் நிலையில், யாழ்ப்பாண மாவட்டத்தில் சுமார் 60 ஆயிரம் பேர் வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். பல ஆயிரம் விவசாயிகளும் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளனர். பல மாவட்டங்களில் இருந்து குடிதண்ணீர்க் கோரிக்கைகள் எழ ஆரம்பித்திருக்கின்றன. இந்த எண்ணிக்கை , வரும் நாள்களில் சடுதியாக அதிகரிக்கும் என்னும் நிலையில், அவர்களுக்கான நிவாரணங்களை வழங்கும் இயலுமை அரசாங்கத்துக்கு இருக்கப்போவதில்லை. இந்தநிலைமை நாட்டின் நெருக்கடியை மேலும் அதிகரிக்கவே செய்யும்.

இந்த வறட்சி நிலைமையில் இருந்து தற்காத்துக் கொள்வதற்கு நாட்டு மக்களின் ஒத்துழைப்பும் அவசியமானது. நீரைச் சேமிக்கவும், மின்சாரத்தைச் சிக்கனமாகப் பயன்படுத்தவும் அரசாங்கத்தால் கோரப்படும் நிலையில் மக்கள் அதுபற்றிய பிரக்ஞை இன்றியே செயற்படுகின்றனர். ஆனால் மக்களின் முன்னெச்சரிக்கையுடன் கூடிய செயற்பாடுகள் மூலமே இந்தச் சிக்கலை எதிர்கொள்ளமுடியும். பிரதானமாக வடக்கு மக்கள் இதைக் கவனத்தில் எடுத்துச் செயற்பட வேண்டும். இல்லையேல் வெப்பத்தாலும் அழிந்தவர்களாக நாம் மாறிவிடுவோம்.

**நாளொரு நல்வார்த்தை**

உலக வரலாற்றைப் படிப்பதை விட உலகில் வரலாறு படைப்பதே இனிமை

— ஜவஹர்லால் நேரு —




# நிதிக் கொள்கையின் பரிமாற்றம் சரியாக நடைமுறையாகவில்லை

## மத்திய வங்கி ஆளுநர் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஓக. 9

**நாட்டின் பொருளாதாரத்தின் மீது நிதிக்கொள்கையின் பரிமாற்றம் இது வரை சரியான முறையில் நடைமுறைப்படுத்தப்படவில்லை. தனியார் துறையின் வட்டி வீதங்கள் மேலும் குறைக்கப்பட வேண்டும் என மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.**

நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. வீழ்ச்சியடைந்துள்ள பணவீக்க வீதத்துக்கேற்ப கொள்கை வீதங்களை மேலும் தளர்த்துவதற்கான சந்தர்ப்பம் உள்ளது.

சர்வதேச நாணய நிதியம் முன்னறிவித்துள்ள 3 வீத சுருக்கத்தை விட வலுவான பொருளாதாரச் செயற்பாட்டை இலங்கை அடைய முடியும். நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியால் ஏற்பட்டுள்ள பணவீக்கம் மற்றும் பண அழுத்தத்தைக் கட்டுப்படுத்தும் வகையில் வட்டி வீதத்தை உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. கடந்த இரண்டு மாதங்களில் கொள்கை வீதங்கள் சுமார் 450 அடிப்படைப் புள்ளிகளால் குறைக்கப்பட்டன. பணவீக்கத்தை 4 முதல் 6 சதவீதம் வரை அடைவதே மத்திய வங்கியின் இலக்கு - என்றார். (ச-இ)

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில்

# ஊழல் விசாரணைகள்: தப்பியோடிய அதிகாரி

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் ஏற்பட்ட நட்டம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ஊழல் விசாரணையில் விசாரணைக்குட்படுத்தப்பட்ட அதிகாரியொருவர் வெளிநாட்டுக்குத் தப்பிச்சென்றுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. வர்த்தகம் மற்றும் விநியோகத்துக்கான முன்னாள் பிரதிப் பொது முகாமையாளரே தனது பதவியிலிருந்து விலகி வெளிநாட்டுக்குத் தப்பிச்சென்றுள்ளார். முக்கியமான பதவியிலுள்ள ஒருவர் விசாரணைகள் இடம்பெறும்வேளை பாதுகாப்பு அனுமதியைப் பெறாமல் பதவியிலிருந்து விலகி வெளிநாடு சென்றுள்ளமை பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. (ச-இ)

# தொழில்நுட்பத் திறன்களை இலங்கைக்குப் பகிரத் தயார்!

## ஈரான் தெரிவிப்பு

இலங்கை உள்ளிட்ட நட்பு நாடுகளுடன் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் திறன்களை பகிர்ந்துகொள்ள நாம் தயாராக உள்ளோம் என ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி தெரிவித்துள்ளார்.

ஈரான் சென்றிருந்த இலங்கை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி கடந்த ஞாயிற்றுக்கிழமை ஈரான் ஜனாதிபதியைச் சந்தித்து கலந்துரையாடினார்.

இரு நாடுகளின் உறவுகளின் வளர்ச்சிக்கும் பொருளாதார வளர்ச்சிக்கு உதவும் விடயங்கள் தொடர்பிலும் கலந்துரையாடினர்.

ஏகாதிபத்திய மற்றும் சுயநல வெளிநாட்டுத் தலையீடுகள் தொடர்பில் இலங்கை கவனமாக இருக்க வேண்டும் எனத் தெரிவித்த ஈரான் ஜனாதிபதி, ஈரான் மற்றும் இலங்கைக்கிடையிலான கூட்டு பொருளாதார ஒத்துழைப்பு ஆணைக்குழுவை மீண்டும் செயற்படுத்த வேண்டுமென வலியுறுத்தினார். (ச-6)

**நாளை** 10.08.2023 வியாழக்கிழமை ஆடி 25

சுபநேரம் : 07.34 - 09.04

ராகுகாலம் : 01.34 - 03.04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவுநாள் அழைப்பு

தோற்றம்
12 . 07 . 1948



மறைவு
22 . 07 . 2022

கடந்த (22.07.2022) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவி

அமரர்

## திருமதி குமாரசாமி நாகரத்தினம்
## (ராணி)

ஓராண்டு நகர்ந்தாலும் நம்மை விட்டு அகலாத உங்கள் நினைவுகள்
நினைவினில் வருகையில் நிலைகுலைந்து போகின்றோம்
உங்களை நினைக்காத நொடிகளும் இல்லை நினைவெல்லாம்
நீங்கள் நிறைந்திருக்கையில்
அன்பினால் பண்பினால் அரவணைப்பினால் ஆளுமையால்
எங்கள் அனைவரது உள்ளங்களிலும் நிறைந்திருக்கும் ஆருயிரே
உங்களை என்றென்றும் நினைத்திருப்போம்.
அன்னையின் ஆத்மா இறைபாதம் சரணடைய பிரார்த்திப்போமாக....
ஓம் சாந்தி...! ஓம் சாந்தி...!! ஓம் சாந்தி...!!!



அன்னாரின் முதலாம் ஆண்டு ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வுகள் இன்று (09.08.2023) புதன்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல. 209, புலவர் வீதி,
நவாலி வடக்கு, மானிப்பாய்

குடும்பத்தினர்
077 401 6184

(cs.51308) (N.L)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புதன் பொய்கை



"மண்ணோ டியைந்த மரத்தனையர் கண்ணோ
டியைடந்துகண் ணோடா தவர்." -வள்ளுவர்

சூழலியல் மீது அதிக அளவு கவனம் செலுத்தாமல் விட்டதன் விளைவாக, கடல் மட்டம் அதிகரிப்பு, வெப்பம் அதிகரிப்பு, காற்று மாசு என்று அனைத்து துறைகளும் காலநிலை மாற்றத்தால் பாதிக்கப்பட்டு வருகிறது.

■ பிரகாஸ்

# பூகோளத்தின் கொதிநிலை!



காலநிலை மாறுபாட்டுக்கு 'பூமி வெப்பமாதல்' என்ற சொல் இனிப் பொருந்தாது. மாறாக 'பூகோளக் கொதிநிலை' என்றுதான் இந்தப் பேரழிவு நிலை அறியப்பட - அழைக்கப்பட வேண்டும் என்றிருக்கின்றார் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அன்ரோனியோ குட்டேரஸ். கடந்த ஒரு லட்சம் ஆண்டுகளாக இல்லாதளவுக்கு பூமியின் வெப்ப நிலை இந்த ஜூலையில் பதிவாகியிருப்பதையடுத்தே இந்த அறிவிப்பு ஐக்கிய நாடுகள் சபையிடம் இருந்து விடுக்கப்பட்டிருக்கின்றது.

காலநிலை மாற்றம் என்ற வார்த்தை சமீப காலமாக தொடர்ந்து உச்சரிக்கப்பட்டுக் கொண்டே வருகிறது. உலக அளவில் பல ஆராய்ச்சியாளர்கள் மற்றும் சூழலியல் சார்ந்து இயங்குபவர்களும் காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ள அனைத்துத் திட்டங்களையும் தீவிரமாக செயல்படுத்த வேண்டும் என்றும் தெரிவித்து வருகின்றனர். சூழலியல் மீது அதிக அளவு கவனம் செலுத்தாமல் விட்டதன் விளைவாக, கடல் மட்டம் அதிகரிப்பு, வெப்பம் அதிகரிப்பு, காற்று மாசு என்று அனைத்து துறைகளும் காலநிலை மாற்றத்தால் பாதிக்கப்பட்டு வருகிறது.

ஒட்டுமொத்த உலகமும் மனித வாழ்வுக்கு ஒவ்வாத பகுதியாக மாறிக் கொண்டிருக்கின்றது. அடுத்தடுத்த ஆண்டுகளில் வெப்பப்புயல்கள், அனல் காற்று என்பன காரணமாக ஐரோப்பியா முழுவதும் கடும் பாதிப்புக்களை எதிர்கொள்ள வேண்டிவரும் என்ற எச்சரிக்கை கடந்த இரு ஆண்டுகளுக்கு முன்னர் புவியியல் வல்லுநர்களால் விடுக்கப்பட்டதுதான். ஆனால், அந்த எச்சரிக்கைகளுக்கு உரிய தார்ப்பரியத்தை, கனதித்தன்மையை உலக நாடுகள் கொடுக்கவில்லை. வழக்கம்போல தொழிற்சாலைகளையும் இமாலய இயந்திர உலைகளையும் வைத்து பூமியைச் சூடாக்கும் நடவடிக்கையை விடாது முன்னெடுத்தன. தற்போது அதன் தாக்கத்தை - எதிர்வினையை அனுபவிக்க ஆரம்பித்திருக்கின்றது உலகம். தனக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்குத் தகுந்த பதிலடியைக் கொடுக்கும் நடவடிக்கையை கனடாவில் இருந்து ஆரம்பித்திருக்கின்றது இயற்கை.

## மனிதப் பேரிடர்


கனடா, அமெரிக்கா என்றதும் உடன் நினைவுக்கு வருவதென்ன?. ஒட்டாவா, லொஸ் வெகாஸ் பெருநகரங்கள், வானுயர்ந்த கட்டடங்கள், அழகிய பூங்காக்கள் இவைதானே. ஆனால் கடந்த ஒரு வாரமாக நிலைமை தலைகீழ். உலகின் நிகழ்காலப் பெருந்துயராக இந்த நாடுகளும் ஒட்டுமொத்த மேற்கத்தேயமும் மாறிநிற்கின்றன. இன்று அதிக வெம்மை நிலவும் நாடுகளில் முதலிடம் கனடாவுக்குத்தான். கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியாவின் லிட்டன் கிராமத்தில் 49.6 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை பதிவாகியுள்ளது. இதுதான் சமீப நாள்களில் மனித வாழ்வுப் பகுதிகளில் நிலவிய உச்சபட்ச வெப்பநிலை.

வெப்பநிலைக்கு எதிராக மக்கள் தம்மைத் தகவமைத்துக் கொள்ள கனடா அரசு பல நடவடிக்கைகளை போர்க்கால அடிப்படையில் மேற்கொண்டிருக்கின்றது. நகரின் பல இடங்களில் செயற்கைக் குளங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தண்ணீரை துமியாக வீசியெறியும் இயந்திரங்கள் வீதிகளில் பொருத்தப்பட்டுள்ளன. குளிரூட்டப்பட்ட பிரமாண்டமாக வளாகங்கள் பிரிட்டிஷ்கொலம்பியாவில் ஆங்காங்கே திறக்கப்பட்டுள்ளன. எனினும் இயற்கைக்கு எதிரான இந்தப் போரில் மனிதனுக்குக் கிடைத்தது என்னமோ பெரும் பின்னடைவுதான்.

## கவனம்பெறும் தன்பேர்க்

மேற்குலகில் நிகழ்ந்திருக்கும் இந்த வெப்ப அலையின் தாண்டவத்தை அடுத்து, உலகத்தின் பேசுபொருளாக மாறியிருக்கின்றார் கிரைட்டா தன்பேர்க். பிரான்ஸில் நடைமுறைப்படுத்தப்பட்ட பரிஸ் பருவநிலை ஒப்பந்தத்தை உலக நாடுகள் நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதில் தீராத மோகம் உடையவர்தான் இந்தத் தன்பேர்க். ஆனால் கிரைட்டாவின் கோரிக்கைகள் உலக மக்கள் மத்தியில் அவரை ஒரு ஆதர்சமாக மாற்றியதே தவிர உலக நாடுகளின் அதிகாரப் பீடங்களின் இரும்பு இதயங்களை அசைக்கவில்லை. அதன் விளைவுதான் மேற்குலகின் வெம்மைக் காட்சிகள்.

பூமி வெப்பமாதலால் ஏற்படும் ஆபத்து இத்துடன் முடிந்துவிட்டதா? என்றால் இல்லை என்பதுதான் பதில். 2016ஆம் ஆண்டு பிரான்ஸின் பரிஸ் நகரில் உலக நாடுகளின் தலைவர்கள் இணைந்து ஓர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர். புவியின் வெப்பநிலையை 2 டிகிரி அளவால் குறைப்பதும் நச்சு வாயுக்களின் வெளியேற்றத்தைக் கட்டுப்படுத்துவதும்தான் அந்த ஒப்பந்தத்தின் முக்கியமான விடயங்கள். துவாலு போன்ற அழிவின் உச்சியில் உள்ள நாடுகளுக்கு இந்த ஒப்பந்தம் தற்காலிகமாக மருந்திட்டது. ஆனால், ஒப்பந்தத்தின் பின்னரான செயற்பாட்டு நடவடிக்கைகள் எந்தவொரு நாட்டாலும் இதயப்பூர்வமாக முன்னெடுக்கப்படவில்லை. மாறாக ஏவுணைச் சோதனைகள், போர், அணுப்பரிசோதனைகள் என்பனதான் எஞ்சி நிற்கின்றன.




ஆதலால், பூகோளக் கொதிநிலையில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. ஆனால், இவ்வளவு வேகமாக வெறும் இரண்டே ஆண்டுகளில் 'வெப்பநிலை' என்பதற்கு மாறாக 'கொதிநிலை' என்பதை பூகோளம் கண்டுகொண்டமை ஆச்சரியம்தான்.

எது எப்படியாக இருந்தாலும் இன்று கண்முன் நிகழ்ந்துகொண்டிருக்கும் இயற்கையின் இந்தக் கோரச் சம்பவங்களுக்கான விதை என்னமோ மனிதன் போட்டதுதான். இனியும் நாம் நல்லவற்றை விதைக்கத் தவறின் விளைவுகள் நாம் இன்னுமின்னும் அல்லல்படும் வகையில்தான் அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

— ஆனையூர்க் கவிராயர்

# கற்பு...



பாலின் வெண்மையைத் தன் இறகுகளில் பதித்திருந்த அந்த இளம் அன்னம், தனது வெண்சிறகுகளை இலாவகமாக விரித்து இளந்தென்றலை இலேசாக ஊடறுத்து பறந்து வந்து ஏரிக்கரையில் அமர்ந்தது. அதன் வரவை வழிமேல் விழிவைத்துப் பார்த்திருந்த அதன் துணை, அதனைக் கண்டவுடன் ஆர்ப்பரித்து வர வேற்று அருகில் சென்று உரிமையுடன் அமர்ந்து கொண்டது. அவை தமக்கும் தமது குஞ்சுகளுக்கும் இரைதேட வேண்டிய நேரமது. அந்த ஏரியின் பரந்த நீர்ப்பரப்பெங்கும் பட்டுத்தெறித்து அந்தப் பிராந்தியத்தையே மஞ்சள் வண்ணம்கொண்டு குளிப்பாட்டிக் கொண்டிருந்த இளம் காலைக் கதிரொளி, ஓர் இன்ப ஆட்சியை நடத்திக் கொண்டிருந்தது.

சற்றுத் தொலைவில் வெண்பஞ்சுச் சிலைபோல அமர்ந்திருந்த மற்றுமொரு அன்னத்தை அந்த ஆண் அன்னம் அவதானித்தது. 'யாரது...கவலை தோய்ந்த முகத்துடன் ...' என்று அது தன் துணையிடம் விசாரித்தது. 'பாவம் ... அது தன் துணையைப் பறிகொடுத்து விட்டுப் பரிதவிக்கிறது...' 'ஏன் ...? என்ன நடந்ததாம்? "அதன் வாழ்க்கைத்துணை நேற்றிலிருந்து காணாமற்போய் விட்டதாம்..." 'அப்படியா...? பாவம்... என்ன நடந்திருக்கும்...? 'மனிதர்களிடத்தில் தான் காணாமற் போதல் என்றால் எம் இனத்திலுமா...? உரையாடியபடியே அவை இரண்டும் அதனை நோக்கி மெல்ல நகர்ந்தன. அந்தத் தனி அன்னம் தலையை நிமிர்த்தி அவை தன்னை நாடி வருவதை பார்த்து விட்டு மீண்டும் நிலம் நோக்கிய படியே அமர்ந்திருந்தது.

'இப்படி எத்தனை நாட்களுக்கு உண்ணாமல் உறங்காமல் இருக்கிறது... மனதைத் திடப்படுத்திக் கொண்டு ஏதாவது சாப்பிடு... நாங்கள் இரை கொண்டுவந்து தருகிறோம்...' ஈடிணையில்லாத தனது துணையைப் பிரிந்த பிரிவுத் துயரில் மூழ்கியிருந்த தனது புது நண்பியிடம் பெண் அன்னம் பரிவுடன் பேச்சுக் கொடுத்தது. 'இல்லை... என்னால் இவ்வுலகில் துணையிழந்து தனியாக எப்படி வாழ முடியும்? "என்ன செய்வது... ? இப்படி நடந்து விட்டது... உனது துணை தொலைந்து போனதற்காக நீயும் உன் வாழ்வைத் தொலைக்க முடியுமா...? 'நீயோ இளம் அன்னம்... வாழ வேண்டிய வயது... நிலமைக்கு ஏற்ப மனதை மாற்றி வாழத்தானே வேண்டும்...' 'என்ன ... ? நாங்கள் மனிதர்களா ... ? நாட்டுக்கு நாடு இடத்திற்கு இடம் கற்பு, ஒழுக்கம் வாழ்க்கைமுறை எல்லாம் வேறுபட... மனித வாழ்வு ஆங்காங்கே செயற்கையாக உருவாக்கப்படுவது... எமது வாழ்வு இயற்கையாக உருவானது...' இவைகளது பேச்சுக்கு நடுவே அந்த ஆண் அன்னம் இரை தேடப் புறப்பட்டது.

சில நிமிட நேர மௌனத்தின் அரவணைப்பின் பின் மீண்டும் அவைகளது விவாதம் தொடர்ந்தது. 'வாழ்க்கை வாழ்வதற்கே... நான் உன்னை இன்னொரு துணையைத் தேடிக்கொள் என்று எம் இன மரபுக்கு மாறாக வற்புறுத்தவில்லை. ஆனால் நீ இவ்வுலகில் வாழ வேண்டும்... அதுவும் சந்தோஷமாக... இது தான் என் ஆசை' 'நீ எனது நண்பி ... எனக்காக என்னை வற்புறுத்துவது தூய நட்பின் அடையாளம்... ஆனால் ...?

...' அந்த அன்னத்தால் தொடர்ந்து தன் உள்ளக் கிடக்கைகளை வார்த்தைகளாக வடிக்க முடியவில்லை. அது மௌனத்திடம் தஞ்சமடைந்தது.

'சரி நீ எதுவும் செய்ய வேண்டாம்... என்னோடு வா இரை தேடலாம்... அது கொஞ்சம் மாறுதலாகவும் மனதுக்கு ஆறுதலாகவும் இருக்கும்...' 'எனக்கு மாறுதலும் வேண்டாம்... ஆறுதலும் வேண்டாம்... எனது துணை வேண்டும்...' 'நீ மீண்டும் அந்தப் புள்ளியைத் தான் சுற்றிக்கொண்டிருக்கிறாய்... இதோ பார் எமது பறவை இனத்திலேயே... கொம்பு மூக்கன்... கிரேசர் பெல்... பபின்... எனப்படும் மேல் நாட்டுப்பறவைகள் கூட துணையை இழந்தால் வேறு வழியின்றி வேறு துணைதேட முயற்சிக்கின்றன... ஆனால் நீயோ...' 'மேல் நாட்டு ஆக்களும் அப்பிடித்தான்... அதுக்காக நான்... ஒழுக்கத்தை இழந்து வாழ முடியாது ... ஒழுக்கத்தோடு சாவதே மேல்...' எரிச்சலுடன் பேசிய அந்த அன்னம் 'விர்' என்று பறந்து சென்று சற்றுத் தொலைவில் இருந்த மணல் புதரில் அமர்ந்து கொண்டது.

'நான் அதன் மனதை புண்படுத்தி விட்டேனோ... ? ' என்று தன்னை நொந்து கொண்டு மற்ற அன்னமும் பறந்து சென்று அதன் அருகில் அமர்ந்து...' 'சரி நான் உன்னை வற்புறுத்தவில்லை... உடனே போய் என் துணையுடன் சேர்ந்து பிள்ளைகளுக்கும் இரைதேடிக் கொடுத்துவிட்டு உனக்கும் கொண்டு வருகிறேன்... கொஞ்சம் என்றாலும் சாப்பிடு...' துன்பத்தில் துவண்டு போன நண்பியை அது வார்த்தைகளால் இரந்தது. மறுகணம் அதன் பதிலுக்குக் காத்திருக்காமல் வானில்பறந்தது. ஏரிப்பக்கமாக பறந்த அந்த அன்னம் தனது இணையுடன் சேர்ந்து இரை தேடி தமது பிள்ளைகளுக்கும் ஊட்டிவிட்டு தனது நண்பிக்கும் உணவூட்டும் ஆர்வத்துடன் அது இருந்த புதர் நோக்கி விரைந்தது. அங்கே அந்தக் கள்ளம் கபடமற்ற நட்பும் பாசமும் நிறைந்த அந்த அன்னப்பறவைக்கு பேரதிர்ச்சி காத்திருந்தது. அதன் இளம் நண்பி... அந்தச் சின்னப்பறவை... ஒழுக்கத்தின் இலக்கணமாக புதரின் அருகில் இறந்து கிடந்தது.

# உடுவில் பிரதேசசெயலகத்தில் கலைஞர் ஒன்றுகூடல்

வலிகாமம் தெற்கு உடுவில் பிரதேசசெயலக கலாசாரப் பேரவை நடத்திய கலைஞர் ஒன்றுகூடல் நிகழ்வு, மேற்படி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் உடுவில் பிரதேச செயலர் த.முகுந்தன் தலைமையில் அண்மையில் சிறப்பாக நடைபெற்றது.


இந்த நிகழ்வின் சிறப்பு அம்சமாக 'காலப்பிழையோவன்றிக் கடவுள்தரும் சோதனையோ சாலப் பொருந்திவந்து சாவெமக்குத் தருகிறாயே!' எனும் தொனிப்பொருளிலான கவியரங்கம் யாழ்.மாநகரசபையின் ஆணையாளரும், கவிஞருமான இ.த.ஜெயசீலன் தலைமையில் இடம்பெற்றது.





கவியரங்க நிகழ்வில், வன்முறை என்னும் தலைப்பில் எழுத்தாளரும், வலிகாமம் வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளருமான சு.ஸ்ரீகுமரனும், போதை என்னும் தலைப்பில் கவிஞர் இ.மணிமாறனும், கடன் என்னும் தலைப்பில் கவிஞர் சி.மகாலிங்கமும், காதல் எனும் தலைப்பில் கவிஞர் வா.வடிவழகையனும் அளிக்கை செய்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அருந்தும் பாலில் அரசியல்

பிரியா இராமநாதன்

**இன்று பால்மா வகைகளுக்குப் பெருத்த தட்டுப்பாடு நிலவும் நிலையில் பலரும் சமூக வலைத்தளங்களிலும் பொதுவாழ்விலும் 'பரவாயில்லை. இனி நாம் பசுப்பாலுக்கு மாறுவோம். நல்லதுதானே' என்பதான கருத்துகளைக் கொண்டிருப்பதை - பகிர்வதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. ஆனால் இது எந்தளவு சாத்தியம்? என்ற கேள்வியும் இங்கு எழுவது தவிர்க்கமுடியாததாகின்றது.**

இலங்கையின் தன்னிறைவுப் பால் உற்பத்தியானது மொத்தத் தேவையில் வெறும் 30 வீதம் மட்டுமே! இன்று எம் நகரங்களில் கிடைக்கும் ஒரு லீற்றர் பாலின் விலை நூற்றியெழுபது ரூபா. சேகரிப்பு மையங்களில் வெறும் எழுபது ரூபாவுக்கு வாங்கப்படும் பால், நுகர்வோரிடத்தே 170 ரூபாவுக்கு விற்கப்படுகிறது. இன்று எம் நாட்டு நிலவரப்படி ஒரு பசுமாட்டின் விலை சுமார் இரண்டரை லட்சம் முதல் நான்கரை லட்சம் வரையில் எகிறிக்கொண்டிருக்கும் நிலையில், சாதாரண ஒரு விவசாயியோ, அல்லது தொழிலாளியோ அதனை வாங்கி பால் வணிகம் செய்யும் அளவுக்கு சாத்தியப்பாடுகள் உள்ளனவா? உண்மையில் இலங்கையில் மாடு வளர்ப்புக்கான தேவை குறைக்கப்பட்டதன் பின்னர் அந்தக் கலாசாரமே அழிக்கப்பட்டுவிட்டது எனலாம்.

ஒரு காலகட்டம் வரையில் பால் உற்பத்தி நம் நாட்டில் தேவையான அளவில் இருந்தது. பின்னாளில் மக்கள் பால்மா பவுடர்களை நுகர்வதில் அதிக ஆர்வம் காட்டவே, உள்நாட்டில் இந்த மாடுவளர்க்கும் பாரம்பரியமும் தொழிலும் மெல்லமெல்ல அருகிச் சென்றன. பண்டாரநாயக்கவின் ஆட்சியின்பின் வந்த ஜெயவர்த்தனவின் ஆட்சியில் திறந்த பொருளாதாரம் என்கிற பெயரில் தாராளமாக இறக்கப்பட்ட பொருள்களில் பால்மா பவுடர்களும் உள்ளடங்கின. மலிவான விலையில் இலகுவாக நினைத்த நேரத்தில் கிடைக்கக்கூடியதாக இருந்த பால்பவுடர் இலங்கை மக்களின் தேநீர் தேவையினையும் பால் தேவையினையும் (எந்தவித எதிர்கால பின்விளைவுகளையும் சிந்திக்காமல்) தீர்த்துவைத்தது. எவ்வித தடையுமின்றி இறக்குமதி செய்யப்பட்ட பாலும், பாற்பொருள்களும், விளம்பரங்கள் மூலமாக மக்கள் மனதில் ஊடுருவிக்கொண்டன.

பால் உற்பத்தித்துறை என்பது அதிக வருமானம் ஈட்டக்கூடியவொன்று என்கிறபோதிலும் இலங்கையைப் பொறுத்தவரையில் உள்நாட்டு உற்பத்தி ஏனோ ஊக்குவிக்கப்படவில்லை என்றே கூறவேண்டும். அரசாங்கங்கள் எடுத்த தவறான முடிவுகளும், சில தனிமனிதர்களின் மற்றும் அரசியல்வாதிகளின் கமிஷன் கொள்ளைகளும் உள்ளூர் உற்பத்தியை முடக்கி வெளிநாட்டு இறக்குமதியை ஊக்குவித்தன என்று சொன்னாலும் தகும். கடந்த அரசாங்கத்தில் உள்ளூர் பால் உற்பத்தி தொடர்பான பிரச்சினைகள் முன்வைக்கப்பட்டு அதற்கான கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டு. பின் பால் தொடர்பான எந்த உற்பத்தியை உள்நாட்டில் யார் தொடங்கினாலும் மிகக்குறைந்த வட்டியில் கடன் கொடுப்பது. மானியம் கொடுப்பது. ஆலோசனைகளை வழங்குவது போன்ற திட்டங்கள் உருவாக்கப்பட்டன.

ஆனால் அந்தத் திட்டங்கள் அடிமட்ட மக்களுக்கு கொண்டுசென்று சேர்க்கப்பட்டதா என்றால் இல்லை என்றே கூறவேண்டும். இப்படியொரு திட்டம் இருப்பதே அநேகருக்கு தெரிந்திருக்கவில்லை. இதுவும் இன்று இலங்கை பால் உற்பத்தியில் தன்னிறைவு காணும் நிலைக்குத் தொலைதூரத்தில் இருப்பதற்கு ஒரு காரணம். எனவேதான் இலங்கை போன்ற நாட்டில் பால்மாக்களை திடீரென தடைசெய்தாலோ பதுக்கி வைத்து விலையை அதிகரித்து விற்றாலோ அது பொதுமக்களை பெரிய அளவில் பாதிப்படையச் செய்வதுடன் பேசுபொருளாகவும் மாறிவிடுகிறது.

நாம் நம் வாழ்வியலில் பல ஆண்டுகள் சற்று பின்னோக்கிப்போவோமாயின், ஊர்கள்தோறும் கிராமங்கள்தோறும் அநேகமாக அனேகரது வீட்டிலும் கால்நடை வளர்ப்பு என்பது சாதாரணமாக இருந்தவொன்று. ஒரு குடும்பத்தின் பால் தேவையினை அவர்களது வீட்டில் இருக்கும் பசுவே தீர்த்துவிடும். அப்படியே பசுக்கள் இல்லாதவர்கள் அக்கம் பக்கத்தில் மாடு வளர்ப்போரிடம் பாலை பணம் கொடுத்து பெற்றுக்கொண்டனர். அவர்களுக்கெல்லாம் பவுடர் பாலின் அவசியம் அத்தியாவசியமாகவில்லை. ஆனால் நிலைமை தற்போது தலைகீழ்.

நகரமயமாக்கலில் விளைநிலங்கள் சுருங்கி கிராமப்புற பொருளாதாரம் என்பது தற்போது அதலபாதாளத்தில் சென்றுகொண்டிருக்கின்றது. வேளாண்மைத் தொழிலை நம்பி வீடுகளில் வளர்க்கப்பட்ட கால்நடைகளுக்கான உணவு,தண்ணீர், பராமரிப்புச் செலவு என அனைத்துமே மெல்லமெல்ல கால்நடைவளர்ப்போர்க்கு சவாலாக மாறத்தொடங்கி பல ஆண்டுகள் ஆகிவிட்ட நிலை. இலங்கைபோன்ற பசுமை நிறைந்த நாட்டில் நாட்டு மாடு வளர்ப்பில் தாராளமாக ஈடுபடலாம் என நாம் நினைக்கக்கூடும் ஆனால் இதன் பின்னணியில் இருக்கும் அரசியல் யாரையும் அந்தத் தொழிலை நடத்தவிடாது என்பதே யதார்த்தம்.

அன்றாடம் நாம் அருந்தும் பாலில் உள்ள வர்த்தக சதிகள் சொல்லில் அடங்காதவை. செயற்கை கருவூட்டலால் காளைகளுக்கான அவசியம் குறைந்தது. போதாக்குறைக்கு மாடறுப்புக்கு தடை தொடர்பான போராட்டங்கள் வேறு. இதனால் காளை வளர்ப்பு என்பது அருகியது. மேய்ச்சல் நிலங்கள் அழிக்கப்பட்டு அவையெல்லாம் கட்டடங்களாக மாறின, மாட்டுத்தீவனங்கள் இறக்குமதியாயின, இன்று இந்தியாவைப்போன்றே இலங்கையிலும் நாட்டு மாடுகளின் வகையறாக்கள் குறைந்து, வெளிநாட்டு மாடுகளின் ஆதிக்கமே அதிகஅளவில் தாக்கத்தினை செலுத்துகின்றன.

அழிந்தது நாட்டு மாடுகளின் இனமும், நமது ஆரோக்கியமும் மட்டுமல்ல இதையொட்டியிருந்த சுயசார்பு பொருளாதாரமும்தான். எளிய உணவாக இருந்த பால் மற்றும் பால்சார்ந்த உணவுப் பொருள்களும் திட்டமிட்டே அழிக்கப்பட்டன. சிற்றூர்களில் முன்பெல்லாம் பெண்கள் பாலை தயிராக்கி கடைந்து வெண்ணை, நெய் எடுத்து விற்கும் வழக்கம் இருந்தது. வெண்ணை எடுத்தபின் கிடைக்கும் துணைப் பொருளான மோரையும் விற்று வருமானம் ஈட்டமுடிந்தது. சிறந்த வெயில்கால பானமாக விளங்கிய லாக்டிக் அமிலம் நிறைந்த நீர்மோர் மக்களுக்கு மலிவான விலையில் கிடைத்தது. இதில் மிகச்சிறப்பானதென்னவென்றால் இப்பொருளாதாரம் பெண்களின் கையில் இருந்ததுதான். எளிய பெண்களிடமிருந்த இந்தச் சிறு வணிக பொருளாதாரம் இன்றோ தட்டிப்பறிக்கப்பட்டு பெரும் வணிக நிறுவனங்களின் வசம் சென்றிருப்பதன் பின்னணியிலும் ஏராளமான அரசியல் உண்டென்றே கூறவேண்டும்!

## பதிப்புத்துறையில் ஒரு மைல்கல்:

இனியன்







## "சத்தியபத்தின் செயம்" மீள்வெளியீடு



1753 இல் எழுதி வெளியிடப்பட்ட 'சத்தியத்தின் செயம்' என்ற மீள் பதிப்பு நூலின் வெளியீட்டு விழா அண்மையில் (26.07.2023 அன்று) சுன்னாகம் பொதுநூலக மண்டபத்தில் நடைபெற்றது. வலிகாமம் வலயத்தின் பிரதிக்கல்விப் பணிப்பாளரும், எழுத்தாளருமான சு.ஸ்ரீகுமரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் தமிழ்த்துறைத் தலைவரும், ஓய்வுநிலைப் பேராசிரியருமான சி.சிவலிங்கராஜா நூலை வெளியிட்டு வைத்தார். தவம் கலர் லாப் உரிமையாளர் தொழிலதிபர் ம.மகேந்திரலிங்கம் நூலின் முதற்பிரதியைப் பெற்றுக்கொண்டார். நூல் தொடர்பான விரிவான மதிப்பீட்டுரையை அருணோதயக் கல்லூரி ஆசிரியர், எழுத்தாளர் சி.ரமேஷ் ஆற்றினார். வாழ்த்துரையை வலிகாமம் தெற்கு பிரதேசசபை பிரதம முகாமை உத்தியோகத்தர் யோ.திவாகரும் வரவேற்புரையை சுன்னாகம் பொதுநூலக நூலகர் திருமதி ஜெயலட்சுமி சுதர்சனும் நிகழ்த்தினர்.

தமிழில் முதலில் வெளிவந்த அச்சு நூலாக போர்த்துக்கேயரின் ஆட்சிக்காலத்தில் 1578 இல் தம்பிரான் வணக்கம் என்ற நூல் விளங்குகின்றது. போர்த்துக்கீச மொழியில் எழுதப்பட்ட கத்தேலிக்க சமய போதனை நூலான இந்நூலை என்றிக்கே என்றிக்கசு என்ற யேசுசபை மறைப்பணியாளர் தமிழில் மொழிபெயர்த்து அச்சில் வெளியிட்டிருந்தார். தம்பிரான் வணக்கம் நூல் இந்தியாவில் கொல்லம் என்ற இடத்தில் வெளியிடப்பட்டது. கிறிஸ்தியானி வணக்கம் என்ற நூலையும் என்றிக்கே என்றிக்கசு 1579இல் வெளியிட்டார்.

அதற்கு முன்னர் போர்த்துக்கல் தலைநகர் லிஸ்பனில் இருந்து 1554 இல் தமிழ்மொழியிலும் போர்த்துக்கீசியத்திலும் அமைந்த திருமறைச் சிற்றேடு' என்ற நூல் தமிழ்ச் சொற்கள் லத்தீன் எழுத்துக்களில் எழுதப்பட்டு வெளியிடப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

ஒல்லாந்தர் காலத்தில் வெளியிடப்பட்டதான 'சத்தியத்தின் செயம்' நூலானது பிலீப்பு தே மெல்லோ என்பவரால் எழுதப்பட்ட புரட்டஸ்தாந்து கிறிஸ்தவ மதக் கருத்துகள் கொண்ட நூலாகும். இவர் கொழும்பு வாழ் தமிழராவார். அத்துடன் கட்டளை பண்ணப்பட்ட முதலாவது சுதேசிய மதபோதகராகவும் இவர் விளங்குகிறார்.

இந்த நூல் இன்று கிடைத்தற்கரிய நூலாக உள்ளது. தேடலில் அகப்படாத இந்நூலை பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை ஆசிரியரான ந.குகபரன் மீள்பதிப்புச் செய்துள்ளார். நூலை அதேவடிவில் மீள்பதிப்புச் செய்துள்ளமை முக்கியமானதாகும். அத்துடன் நூலின் சொற்களுக்கான அரும்பத விளக்கத்தையும் அவர் தந்துள்ளார். நூல் குறித்த விரிவான அறிமுகத்தையும், நூலின் முக்கியத்துவத்தையும், நூலை வாசிப்பதற்கான வழிகாட்டலையும் தனது பதிப்புரையில் தெளிவாக எடுத்துக்காட்டியுள்ளார். ஈழத்துப் பதிப்புத் துறை சார்ந்து ஆராய்வோருக்கு இந்நூல் புதிய செய்தியை வெளிப்படுத்தும் எனக் கருதலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Obituary notice

## Rev. Dr. D. S. Solomon

**8th National Principal (2014 - 2022), Jaffna College**

It is profound sadness and grief that we inform of the passing away of Rev. Dr. D. S. Solomon on Sunday, 6 August 2023.
A funeral service will be held on Wednesday, 09 August 2023 at 2 pm at the JDCSI Cathedral, Vaddukoddai.
Thereafter, the remains will be taken to Uduppiddy Cemetery around 4 pm.
A service and burial will be followed in the Uduppiddy Cemetery around 5 pm.

**Information: by Wife and Children**
**Contact numbers: 0766554221/076 526 7621**

---

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் கார்த்திகேசு குணரத்தினம்

Retired Asst Director of Agriculture,
North-East Province, Sri Lanka,
National Consultant UN/FAO, Sri Lanka
(முன்னாள் தேசிய கரப்பந்தாட்ட வீரர் – இலங்கை, சமூக சேவையாளர்)

பிறப்பு 22.05.1933 இறப்பு 01.08.2021

எமக்கு மனித வடிவில் வந்த தெய்வம் நீங்கள் ஐயா!
பண்பின் சிகரமாய், பாசமுள்ள துணைவராய்
தந்தையாய், தாத்தாவாய், உறவினராய், நண்பராய்
எமக்கு வழிகாட்டினீரே!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

சிட்னி - அவுஸ்திரேலியா.
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
(CS-51554)AH-1

---

# மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்திற்கு சொந்தமான பயிர்ச் செய்கைக் காணிகள் காலபோக செய்கைக்கு குத்தகை ஏலத்தில் விடப்படவுள்ளது.

மேற்படி எமது மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்திற்கு சொந்தமான கிளிநொச்சி பகுதியை உள்ளடக்கிய பின்வரும் கமக்கார அமைப்பின் கீழுள்ள பயிர்ச்செய்கைக் காணிகள் 2023 ஆம் ஆண்டு காலபோக பயிர்ச்செய்கைக்கு மட்டும் குத்தகைக்கு ஏலம்கூறல் மூலம் வழங்குவதற்கு முகாமைக்குழு தீர்மானித்திருப்பதால் பயிர்ச்செய்கையினை மேற்கொள்ள விரும்பும் விவசாயிகள் பின்வரும் விலாசத்திற்கு குறித்த நேரத்திற்கு வருகைதந்து பகிரங்க ஏலத்தில் தங்களால் கோரக்கூடிய அதிகூடிய கேள்வித் தொகையினை கோரி பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**குறிப்பு:**
அதிகூடிய கேள்வி தொகையினை கோரி பயிர்ச்செய்கையினை மேற் கொள்ள தெரிவு செய்யப்படும் விவசாயிகள் கோரியுள்ள குத்தகைத் தொகையினை முழுமையாக அன்றைய தினமே செலுத்துதல் வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றோம். அத்துடன் முகாமைக்குழுவின் ஏல விற்பனை குழுவின் தீர்மானமே இறுதியானதாக இருக்கும்.

**ஏலத்திற்கான விபரம் :**
திகதி : 19.08.2023
நேரம் காலை -9.30 மணி
இடம் - கிளிநொச்சி பன்னங்கண்டி பிள்ளையார் ஆலய முன்றலில்

**காணிகள்**

**மகிழங்காடு கமக்கார அமைப்பு**
1. திருவையாறு 10 ஏக்கர்
2. திருவையாறு -20 ஏக்கர்
3. 3ம் வாய்க்கால் -26 ஏக்கர்

**முரசுமோட்டை கமக்கார அமைப்பு**
1. முரசுமோட்டை வயல் -26 ஏக்கர்

**புளியம்பொக்கனை கமக்கார அமைப்பு**
1. புளியம்பொக்கனை வயல் 10 ஏக்கர்

திகதி 20.08.2023
நேரம்- காலை 9.30
இடம் - மகாதேவசுவாமிகள் சிறுவர் இல்லம்,ஜெயந்திநகர்,கிளிநொச்சி.

**உருத்திரபுரம் கமக்கார அமைப்பு, சிவநகர் கமக்கார அமைப்பு**
1. 9ம் வாய்க்கால் உருத்திரபுரம் -04 ஏக்கர்
2. புதுமுறிப்பு வயல் -10ஏக்கர்

**பல்லவராயன்கட்டு கமக்கார அமைப்பு**
1. திருநாவுக்கரசு வயல் -10ஏக்கர்

**தொடர்பு முகவரி -**
**ச.மோகனபவன்**
**தலைவர்**
**மகாதேவசுவாமிகள் சிறுவர் இல்லம்**
**ஜெயந்திநகர், கிளிநொச்சி.**
**தொ.இல-0773240950, 0214923118**

CR)AH-1

---

# சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஓக. 9


நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானம் நடத்தும் வாராந்த சுக்கிரவாரச் சிறப்புச் சொற்பொழிவு ஆலய சண்முக விலாச மண்டபத்தில் நாளைமறுதினம் 11ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு சிவநெறிப் பிரகாசர் சமய ஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் தலைமையில் இடம்பெறவுள்ளது.

"கொற்ற வேல் " என்னும் விடயப்பொருளில் சைவப்புலவர் செ. கந்த சத்தியதாசன் சிறப்புச் சொற்பொழிவை ஆற்றவுள்ளார். சொற்பொழிவிலிருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டு பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (எ-ரி2)

---

# 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 15 05 1978



மறைவு 06 07 2023

கடந்த 06.07.2023 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

## அமரர் முத்துக்குமாரசாமி கணேஸ்வரன் (குட்டி)

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (09.08.2023) புதன்கிழமை காலை 9.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபறவுள்ளது. மேற்படி ஆத்மசாந்திப்பிரார்த்தனையில் குடும்பசகிதம் கலந்துகொண்டு, அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
மேலும் அன்னாரின் மறைவுச் செய்தியறிந்து நேரிலும், தொலைபேசி மூலமாகவும் அனுதாபம் தெரிவித்த உள்நாட்டு, வெளிநாட்டு உற்றார், உறவினர், எமக்குப் பலவழிகளிலும் உதவி புரிந்த நல்லுள்ளங்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

"ஞானோதயம்"
கைதடி கிழக்கு, கைதடி.

**குடும்பத்தினர்.**

---

# கேள்வி அறிவித்தல்

## மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை (PSDG) வேலைத்திட்டம்
## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்

01. தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை ,மானிப்பபாய் அவர்களினால் தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறான வேலைகளுக்காக கோரப்படுகின்றது.

02. கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடாத்தப்படும். ஆயினும் நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட 03/2020(i) ஆம் இலக்க 2021.01.11 ஆம் திகதி 04/2016(iii) ஆம் இலக்க 2021.02.18ஆம் திகதிய மற்றும் 04/2016(iv) இலக்க 2023.02.09 ஆம் திகதய பொது நிதிச் சுற்றறிக்கைகளுக்கு அமைவாக வட மாகாணத்தை சார்ந்தவர்களுக்கும் மற்றும் வேண்டப்படும் உரிய தரத்தை கொண்டிருப்போருக்கும் முன்னுரிமையளிக்கப்படும்.

03. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி புனரமைப்பு வேலைகளுக்கு பொருத்தமான தரத்தில் நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவு செய்தவராகவும் இருத்தல் வேண்டும்.

04. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி IV இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி V இல் காட்டப்பட்டுள்ளது.

05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் செயலாளர், வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, யாழ் வீதி மானிப்பாய் எனும் முகவரியில் (தொலைபேசி இலக்கம் 021 225 5381) இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஆங்கில மொழியிலான பூரணமான கேள்வி ஆவணங்களில் பூரணமான தொகுதி ஒன்றை தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, யாழ் வீதி மானிப்பாய் எனும் முகவரியில் 08.08.2023ஆம் திகதியிலிருந்து 21.08.2023ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் காலை 09.00 மணிக்கும் மாலை 15.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா. 2,000.00 இனை (வரி நீங்கலாக) செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.

07. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்வியை இரு ஆவணங்களில் தயாரித்து மூலஆவணம், நகல்ஆவணம் என தனித்தனி உறைகளிட்டு, தலைவர்,உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை,மானிப்பாய் எனும் முகவரிக்கு 22.08.2021ஆம் திகதி காலை 10.30 மணிக்கு முன்பதாக நேரடியாகவே அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்தவுடன் வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

08. கேள்விப் பிணை வைப்புத்தொகையானது கீழே அட்டவணையில் காட்டப்பட்டவாறு அனுமதிக்கப்பட்ட வங்கியில் செலுத்தி அதன் உண்மைப்பிரதியினை கேள்வி ஆவணத்துடன் இணைத்து சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

09. கேள்வி திறப்பதற்கான முன்னோடிக்கூட்டம் 2023.08.16ஆம் திகதி வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை மானிப்பாய் தலைமை அலுவலகத்தில் காலை 10.00மணிக்கு நடைபெறும். இக்கூட்டத்திற்கு ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கலந்துகொள்ள முடியும்

10. சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை நிராகரிக்கவோ அல்லது மீள்கேள்வி கோரவோ பெறுகைக்குழுவிற்கு அதிகாரம் உண்டு.

### மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை(PSDG) - 2023

| தொ. இல | வேலை விபரம் மற்றும் கேள்வி இல | மதிப்பீட்டு தொகை மில்லியன் (VAT நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப் படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | கேள்வி செல்லுபடியாகும் காலம் | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| 01 | கல்லூண்டாய் திண்மக்கழிவற்றல் முகாமைத்துவ நிலையத்தில் கொங்கிறீற் தளம், மற்றும் காவலாளி அறை கட்டட விரிவாக்கல் வேலை NP/14/41(16)/W/PSDG/2023/23 | 5.65 | 98 நாட்கள் | C7 and C6 (கட்டடம்) | 06.11.2023 | 56,600.00 | 04.12.2023 |
| 02 | கொத்துக்கட்டி மயான எரிகொட்டகையின் விரிவாக்கல் வேலை NP/14/41(16)/W/PSDG/2023/24 | 1.30 | 45 நாட்கள் | C9,and C8 (கட்டடம்) | 09.10.2023 | 13,000.00 | 06.11.2023 |

**தலைவர்,**
**உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை**
**மானிப்பாய்.**
**08.08.2023**

(CR/40387)AH-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

மலர்வு 01 . 10 . 1935



உதிர்வு 06 . 08 . 2023

## திருமதி மகாராஜா செல்லம்மா

பலாலி தெற்கு வயாவிளானை பிறப்பிடமாகவும் கொழும்பு வெள்ளவத்தையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி மகாராஜா செல்லம்மா கடந்த (06.08.2023) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - சின்னபிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற செல்லர் - கதிராசிப்பிள்ளை ஆகியோரின் மருமகளும் காலஞ்சென்ற செல்லர் மகாராஜாவின் பாசமிகு துணைவியாரும், மகாசக்தி, சிவகுமார் ( டென்மார்க்), ஜெயக்குமார் ( சுவிட்சர்லாந்து), நந்தகுமார் (டென்மார்க்) ஆகியோரின் அன்னையும் செல்வரட்ணம் (ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர்- நீர்ப்பாசனதிணைக்களம்), லலிதா (டென்மார்க்), வரதராணி (சுவிட்சர்லாந்து), கோபிகா (டென்மார்க்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்றவர்களான V.K.நடராசா, முத்தையா ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற ஜெனிஷன், ரெண்டிகா, துளஷினி, கிஷோராம், பவித்திரா, விதுஷன், ஆரணி, அக்ஷ்யா, நிவேதா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.08.2023) புதன்கிழமை மு.ப 10 மணியளவில் பண்டத்தரிப்பு வடலியடைப்பு அரசடி வீதியில் உள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS/51558 ) AH-1

0773942741

# நினைவலைகள்

35 வருட நினைவில்... 365 ஆம் நாள் கனவில்...

அத்தாயில் 25.03.1953



அன்னியரின் அழிப்பில் 09.07.1988

நடராசா பாலகிருஷ்ணன்

அல்வாயில் 25.10.1953



ஆலவாயில் 21.07.2022

பாலகிருஷ்ணன் பரஞ்சோதி

அறங்காத்து அயரா உழைப்பினால்
குறள் வளி பயணித்த குடும்பமோ
கறள் கட்ட வந்த காட்டேறி பிசாசுகளால்
பிறை நுதலாள் பிய்த்து எறியப்பட்டாள் - காரிகை இவள்
சிறகொடிந்த பறவையாய் செய்வதறியாது தவித்தாள்
நறுமணம் வீசும் நால் குஞ்சுகள் ஐயகோ - நெஞ்சே
உறைந்து நிற்க உறுதிகொண்ட மனத்தினலாள்
திறம்பட நனைந்து தனியொரு புழுவாய் துடித்தீரே அம்மா!
பிறைவைத்த பெருமாள் செயலார் பெருமைசேர
உறைய வைத்த வெறுமை போக்கி வானேந் தேசம் ஏற
நறுமணம் ஈய்ந்த அன்னையே நாளைய பொழுது உம்
நினைவோடு விடியட்டும்....

எமது பாசமிகு இல்லற விருட்சங்கள் இருவரது நினைவேந்தல் நிகழ்வு இன்று (09.08.2023) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அந் நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு வேண்டுகின்றோம்.

பெரியார் பகுதி,
அல்வாய் கிழக்கு, அல்வாய்.

குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## வேலாயுதபிள்ளை இராஜேஸ்வரி

தோற்றம் 14.12.1948

மறைவு 06.08.2023



யாழ். கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், வாழ்விடமாகவும், கனடா Brampton ஐ தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுதபிள்ளை இராஜேஸ்வரி (06.08.2023) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான நாரயணபிள்ளை நாகேஷ்வரி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இரத்தினம் தங்கம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற வேலாயுதபிள்ளை அவர்களின் மனைவியும்,தர்சன், தட்சாயினி, தனுஷியா ஆகியோரின் பாசமிகு தாயாரும்,பிரதீபன், அனிதா ஆகியோரின் அன்பு மாமியாரும்,பிரதக்ஷன், ஜனுகென் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும்,இரத்தினேஸ்வரி, காலஞ்சென்ற வர்களான தெய்வேந்திரம்பிள்ளை, இராஜேந்திரம்பிள்ளை, பரமசிவம்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும்,யோகராணி, இராஜலட்சுமி, சகுந்தலாதேவி, தம்பிஜயா ஆகியோரின் அன்பு மைத்துனியும், இராஜலட்சுமி, சிவமலர், யோகராணி, பரமேஸ்வரன், வசந்தரூபி ஆகியோரின் அன்பு அண்ணியும், புரந்திரதாசன், தேவரஞ்சன், தேவரஞ்சினி, காலஞ்சென்றவர்களான செல்லத்துரை, நிர்மலானந்தன் ஆகியோரின் அன்பு சகலியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பார்வைக்காக இன்று (09.08.2023) புதன்கிழமை Chapel Ridge Funeral Home and Cremation Centre இல் வைக்கப்பட்டு நாளை (10.08.2023) வியாழக்கிழமை Highland Hills Funeral Home and Cemetery இற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல் : குடும்பத்தினர்

(CS/51559)AH-1

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நாட்டின் பல பகுதிகளிலும் மிதமான மழைக்கு வாய்ப்பு

யாழ்ப்பாணம், ஓக. 9
வெப்பச்சலனம் காரணமாக அடுத்த 4 நாள்களில் நாட்டின் பல பகுதிகளில் மிதமான மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் புவியியற்துறை விரிவுரையாளர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
எல் நினோ தாக்கத்தின் காரணமாக இலங்கை முழுவதும் வெப்பமான வானிலை நிலவுகிறது. நாட்டின் பல பகுதிகளுக்கும் தற்போது பகலில் வெப்ப நிலை உயர்வாக காணப்படுகின்றது. பல மேற்பரப்பு நீர் நிலைகளின் ஆவியாக்க அளவு மாத சராசரியை விட 26 வீதம் உயர்வாகக் காணப்படுகின்றது. இதனால் பல குளங்களில் நீர் மட்டம் சடுதியாக குறைவடைந்து வருகின்றது. பல பிரதேசங்களில் நீர்ப்பற்றாக்குறை நிலவும் சூழ்நிலை காணப்படுகின்றது.

இந்தநிலையில் வெப்பச்சலனம் காரணமாக அடுத்த 4 நாள்களில் நாட்டின் பல பகுதிகளில் மிதமான மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது. ஆனாலும் இம்மழை தற்போது நிலவும் வெப்பமான வானிலை காரணமாக ஏற்பட்டுள்ள பாதிப்புக்களை குறைப்பதற்கு போதுமானதல்ல. எனினும் மழை கிடைத்தால் அது ஒரு சில நாள்களுக்காவது சௌகரியமான வானிலை நிலைமையை உருவாக்கும். தற்போதைய நிலையில் முகில்களின் நிலைமையைப் பொறுத்தவரை மழை கிடைப்பதற்கான வாய்ப்புக்களே காணப்படுகின்றன. எனினும் வெப்பச்சலன செயற்பாடுகளில் மாற்றம் ஏற்பட்டால் மழைக்கான வாய்ப்புகள் இல்லாமலும் போகலாம் - என்றார். (ம)


## மத்திய வங்கிக்குள் நுழைந்த 8 பேர் கைது

கொழும்பு, ஓக.9
இலங்கை மத்திய வங்கி வளாகத்துக்குள் சட்டவிரோதமாக நுழைந்து போராட்டத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் பெண் ஒருவர் உட்பட 8 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். குத்தகை தொடர்பான பிரச்சினைக்கு நீதி கோரி சிவில் அமைப்பு ஒன்று நேற்றுக் காலை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டது. அந்தக் குழுவினர் மத்திய வங்கி வளாகத்துக்குள் பலவந்தமாக நுழைந்ததையடுத்து அவர்களைப் பொலிஸார் கைது செய்தனர். (எ-இ)




## மரண அறிவித்தல்

தோற்றம் 19 . 07 . 1957 — மறைவு 08 . 08 . 2023



### ஏகாம்பரம் சிவகுமாரன்

(ஓய்வுபெற்ற ஊழியர், தபால் திணைக்களம் - கோண்டாவில்)

கொக்குவில் மேற்கை பிறப்பிடமாகவும், சங்கிலியன் வீதி நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட ஏகாம்பரம் சிவகுமாரன் அவர்கள் நேற்று (08.08.2023) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.
அன்னார் காலஞ்சென்ற ஏகாம்பரம் மங்கையற்கரசி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற ஆறுமுகம் சிவநாயகி தம்பதியரின் அன்பு மருமகனும், கோகிலவதியின் (ஓய்வுபெற்ற ஆசிரியை) அன்புக் கணவரும், தர்வீணா (யாழ்/ பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவி), லிங்கேசன் (ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக மாணவன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சத்தியேந்திரா, சிவசோதி, சிவநேசன், சிவகுணநாதன், சிவஞானம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற நாகேஸ்வரன் மற்றும் சிவராணி, ரஜனி, காலஞ்சென்ற மகாலக்ஷ்மி மற்றும் நேசரஞ்சினி, சாந்தினி, ஸ்ரீஸ்கந்தராஜா, சறோஜினி, தர்மாவதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.08.2023) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

44/15, சங்கிலியன் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்.
077 958 1595
077 634 1283

(CS 25895)A-1

## மரண அறிவித்தல்

பிறப்பு 15 . 07 . 1967 — இறப்பு 08 . 08 . 2023



### சுந்தரலிங்கம் தங்கேஸ்வரன்

ஏழாலை வடக்கை பிறப்பிடமாகவும் சுவிசை வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரலிங்கம் தங்கேஸ்வரன் அவர்கள் நேற்று (08.08.2023) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் காலஞ்சென்ற சுந்தரலிங்கம் சந்திராதேவி தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான துரைசிங்கம் மனோன்மணி தம்பதியரின் மருமகனும், சுமதியின் (சுவிஸ்) பாசமிகு கணவரும், தனுசன், சாருசன், சுதர்சன் ஆகியோரின் அன்புத் தந்தையும், தயாநிதி (பிரான்ஸ்), சிவநிதி (கனடா), காலஞ்சென்ற சுகந்தினி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் பின்னர் அறிவிக்கப்படும்.
இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

ஏழாலை வடக்கு,
ஏழாலை.

தகவல்: குடும்பத்தினர்.
076 75 55 008

(CS 25893) A-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 23 . 08 . 1966 — மறைவு 06 . 08 . 2023



### திருமதி மகேஸ்வரன் நவரஞ்சிதம் (நவம்)

மீசாலை கிழக்கு, மீசாலை மாவடிப்பிள்ளையார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரன் நவரஞ்சிதம் (நவம்) கடந்த (06.08.2023) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.
அன்னார் மகேஸ்வரனின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் இராசமணியின் மூத்த மகளும், காலஞ்சென்ற முத்துலிங்கம் மகேஸ்வரியின் அன்பு மருமகளும், கார்த்தீபன் (பிரான்ஸ்), கஜன், நிதர்சன், சஞ்ஜீவ் ஆகியோரின் பாசமிகு தாயாரும், சுதர்ஜினி (பிரான்ஸ்), நிருஸ்த்திக்கா, டிலோசா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், கிஷ்விந், யஷ்விகா, கனிஷ்கா, லிதிசன் ஆகியோரின் பேர்த்தியும், குகானந்தன், நித்தியானந்தன், பிரதீபா (லண்டன்), மனோரஞ்சிதம், பிரபாகரன் (பிரான்ஸ்), டயாராணி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், மகேந்திரன் (கனடா), மனோகரன் (கனடா) காலஞ்சென்ற தேவபாலன் மற்றும் மனோரஞ்சினி (கனடா), சுகதாஸ் (கனடா), ஜெகதாசன் (கனடா), பிறேமாவதி, ஸ்ரீகுபேரன் (லண்டன்), சிவநாதன், ஜெயக்குமார் (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனியும், சாந்தம், சந்திரவதனா (கனடா), நிர்நாளினி, விஜயரட்ணம் (கனடா), ரஞ்சிதமலர் (கனடா), பச்சலாதேவி (கனடா) ஆகியோரின் சகலியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.08.2023) வியாழக்கிழமை காலை 8.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் ஏற்றுக்கொள்ளவும்.

077 355 7742 - கஜன்
077 335 2073 - நிதர்சன்
077 366 0536 - சஞ்ஜீவ்

தகவல்:
குடும்பத்தினர்.

(CR 40388) A-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 21 . 07 . 1953 — மறைவு 07 . 08 . 2023



### கதிர்காமு யோகநாதன் (பவளகாந்தன்,பெரியராசா)

அரியாலை திருமகள் வீதியை பிறப்பிடமாகவும் நுணாவில் கிழக்கு கல்வயல் சாவகச்சேரியை வதிவிடமாகவும் கொண்ட கதிர்காமு யோகநாதன் கடந்த (07.08.2023) திங்கட்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான கதிர்காமு பவளம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னையா இரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும், பராசக்தியின் பாசமிகு கணவரும், பிரசாந்த், பிரதீப், நிஷாந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான வைகுந்தசாமி சரஸ்வதி, சின்னத்துரை காந்தமலர், ரஞ்சன் மற்றும் அருமைலிங்கம் செல்வமலர் (சின்னக்கிளி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், தர்சி, திவ்யா ஆகியோரின் அன்பு மாமனும், அகர்ஜன், அக்ஷயன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.08.2023) புதன் கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.
இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

நுணாவில் கிழக்கு,
கல்வயல், சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்.

A-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளூராட்சி சபைகளை மீளக்கூட்டுதல்

# ஜயந்தவால் முன்வைக்கப்பட்ட சட்டவரைவுகள் முரணானவை!

உள்ளூராட்சி மன்றங்களை மீளக் கூட்டுவது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த கெட்டகொடவால் முன்வைக்கப்பட்ட மூன்று தனிநபர் சட்டவரைவுகளும் அரசமைப்புக்கு முரணானது என்று உயர் நீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ளது.

மூன்று சட்ட வரைவுகளுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மீதான விசாரணையின்போது சமர்ப்பிக்கப்பட்ட சமர்ப்பிப்புகளின் அடிப்படையில் உயர்நீதிமன்றம் தனது முடிவை எடுத்துள்ளது.

நெருக்கடி காரணமாக தேர்தலை நடத்தமுடியாது என அறிவிக்கப்பட்டால், கலைக்கப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களை மீண்டும் கூட்டுவதற்கான அதிகாரங்களை அமைச்சருக்கு வழங்குவதற்கான சட்டங்களைத் திருத்துவதற்கு மூன்று தனிநபர் சட்ட வரைவுகள் சமர்ப்பிக்கப்பட்டன.

இதன்படி, 1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேசசபைச் சட்டம், மாநகர சபைகள் கட்டளைச் சட்டம் மற்றும் நகரசபைகள் கட்டளைச் சட்டம் ஆகிய வற்றை திருத்துவதற்கு முன்மொழியப்பட்ட சட்டவரைவுகளை நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த கெட்டகொட நாடாளுமன்றில் சமர்ப்பித்தார். இது தொடர்பில் உயர் நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்ட நிலையிலேயே, சட்டவரைவுகள் நாடாளுமன்றத்தில் சிறப்புப் பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட வேண்டும், மேலும் அவை பொது வாக்கெடுப்பில் அங்கீகரிக்கப்பட்டு நாடாளுமன்றத்தின் சட்டமாக மாறவேண்டும் என்று உயர் நீதிமன்றம் வியாக்கியானம் வழங்கியுள்ளது. நாடாளுமன்ற அமர்வு நேற்று ஆரம்பமாகியபோது சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவால் உயர் நீதிமன்றத்தின் தீர்மானம் சபையில் சமர்ப்பிக்கப்பட்டது. (அ-ம)

# குடும்பத்தலைவரை காணவில்லை

பரு. பொலிஸாரிடம் முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஓக. 9

வடமராட்சி - நாகர்கோவில் கிழக்குப் பகுதியைச் சேர்ந்த இளம் குடும்பத்தலைவர் ஒருவரைக் காணவில்லை என்று அவருடைய மனைவி பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு வழங்கியுள்ளார்.

சோமசுந்தரம் அரியதாஸ் (வயது-25) என்பவரே இவ்வாறு காணாமற்போயுள்ளார் என்று முறையிடப்பட்டுள்ளது. இது தொடர்பில் காங்கேசன்துறை குற்றத்தடுப்புப் பிரிவினருக்கும் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், முறைப்பாடுகள் தொடர்பில் மேலதிக விசாரணைகள் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-ம-100)

## எதிர்ப்பாலேயே...

காரணம் என்று மின்சக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எமது நாட்டில் மின் உற்பத்திக்கு மாற்று வழிமுறையாக காற்று விசை மற்றும் புதுப்பிக்கத்தக்க வலுசக்தி மூலங்களைப் பயன்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றபோது அவற்றுக்கு கடும் எதிர்ப்புகள் வெளிப்படுத்தப்படுகின்றன. குறிப்பாக அண்மையில் மன்னாரில் நிர்மாணிக்கத் திட்டமிட்ட காற்றாலை நிர்மாணப்பணிகளுக்கு அந்தப் பகுதி மக்கள் எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டங்கள ல் ஈடுபட்டனர். உண்மையில் சில குழுக்கள் தங்களின் அரசியலுக்காக மக்களைத் தூண்டி விடுகின்றனர். மாற்று மின்கட்டமைப்பை உருவாக்க அனைவரும் அரசாங்கத்துக்கு ஒத்துழைக்கவேண்டும் - என்றார். (அ-ம,26)

## தண்ணீர்...

உள்ளது - என்று மின்சக்தி, வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நீர்ப்பாசனத் திணைக்களத்துடன் கலந்துரையாடி நாம் முன்வைத்த அமைச்சரவைப் பத்திரத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது. அதன்படி, நாடு பூராகவும் தொடர்ச்சியாக மின்சாரத்தை விநியோகிப்பதுடன், வழங்க இயலுமான கொள்ளளவு நீரை, சமனலவெவ நீர்த்தேக்கத்தில் இருந்து விநியோகிக்கவும், அவ்வாறு விநியோகிக்கப்படும் நீரின் மூலம் மின் உற்பத்தியை செயற்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில், நேற்றுக் காலை முதல் சமனலவெவ நீர்த்தேக்கத்தில் இருந்து நீரை விநியோகிக்க ஆரம்பித்துள்ளதுடன் சமனலவெவ நீர்த்தேக்கத்தின் இருப்புக்கு ஏற்ப, தொடர்ந்து வரும் நாள்களில் நீர் விநியோகிக்கப்படும். நீர் இல்லாமல் மின் உற்பத்தி பாதிக்கப்படுமாயின், தென் மாகாணத்தில் மாத்தறை, அம்பாந்தோட்டை மாவட்டங்களிலும், காலி மாவட்டத்தில் பகுதியளவிலும் இரத்தினபுரி மாவட்டத்திலும் மின்சாரம் துண்டிக்கப்படும் அபாயம் ஏற்படும். எனினும், தொடர்ச்சியாக மின்சாரம் வழங்குவதை உறுதிப்படுத்தும் நோக்கில், அத்தியாவசிய தேவையின் அடிப்படையில் தேவையான மின்சாரத்தைக் கொள்வனவு செய்யவும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

மின்வெட்டு மீண்டும் அமுல்படுத்தப்படுமாயின், வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை, கைத்தொழில்கள் என்பன வீழ்ச்சியடைய வாய்ப்புள்ளது. குறிப்பாக மருத்துவமனையின் செயற்பாடுகள் பாதிக்கப்படுவது மாத்திரமன்றி மக்களின் இயல்பு வாழ்க்கையும் கேள்விக்குறியாகிவிடும். பொதுமக்கள் மின்சாரத்துக்குப் பதிலாக மாற்று வழிமுறையாக, எரிபொருள்களில் இயங்கும் மின்பிறப்பாக்கிகளை பயன்படுத்த ஆரம்பிப்பார்களாயின், நாட்டில் எரிபொருள் பற்றாக்குறை ஏற்படுவதுடன், மீண்டும் எரிபொருள் வரிசைகள் ஏற்படும். எனவே, ஒரு நெருக்கடியில் இருந்து இன்னும் பல நெருக்கடிகளை உருவாக்குவதற்குப் பதிலாக, முதல் நெருக்கடிக்குத் தீர்வாக இயலுமான கொள்ளளவு நீரைவிடுவிக்கவும், இரண்டாவது, மூன்றாவது மற்றும் நான்காவது நெருக்கடிகள் ஏற்படாமல், தொடர்ச்சியான மின்சார விநியோகத்தை உறுதிப்படுத்த அவசியமான மாற்று வழிகளை நடைமுறைப்படுத்தவும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது - என்றார். (அ-ம-26)

## நாட்டில்...

2023ஆம் ஆண்டு சர்வதேச அளவில் 'எல் நினோ' ஆண்டு என்று ஐக்கிய நாடுகள் சபை கடந்த சில மாதங்களுக்கு முன்னரே பகிரங்கப்படுத்தியது. மேற்கத்தேய நாடுகளும், துவாலு உள்ளிட்ட மிகச் சிறிய தீவு நாடுகளும் இதனால் கடும் பாதிப்புக்குட்படும் என்றும், பில்லியன் டொலரில் பொருளாதார இழப்பும், வெப்பச் சாவுகளும் ஏற்படலாம் என்றும் ஐக்கிய நாடுகள் சபை அபாய ஒலி எழுப்பியிருந்தது. இந்த நிலையிலேயே, 'எல் நினோ' தாக்கம் இலங்கையில் தற்போது தாண்டவமாட ஆரம்பித்துள்ளது.

இலங்கையில் உள்ள பல குளங்களும், நீரேரிகளும், நீர்த்தேக்கங்களும் நாளுக்கு நாள் வரலாறு காணாத தண்ணீரின் இருப்பிழப்பைச் சந்தித்து வருகின்றன. மவுசாகல, காசல்ரீ, கொத்மலை, லக்ஸபான, பொல்பிட்டிய உள்ளிட்ட நீர்த்தேக்கங்கள் நீர் மட்டத்தை வெகுவாக இழந்துள்ளன. பல நீர்த்தேக்கங்களில் இருந்து விவசாய நடவடிக்கைகளுக்குத் தண்ணீர் திறந்து விடப்படுவது விட்டுக் கொடுப்புக்களுக்கு இடமில்லா வகையில் நிறுத்தப்பட்டுள்ளது. இன்னும் பல நீர்த் தேக்கங்களிலிருந்து விவசாயத்துக்காகத் திறந்து விடப்படும் தண்ணீரின் அளவு வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளது. இதனால், விவசாயத்துக்குத் தேவையான தண்ணீரை உடன் திறந்துவிடவேண்டும் என்றும் இல்லாவிடில் நீர்த்தேக்கங்களில் இருந்து தன்னிச்சையாக தண்ணீர் எடுக்கப்படும் என்று விவசாய அமைப்புகள் பலவும் அரசாங்கத்துக்கு எச்சரித்துள்ளன. இந்த நிலையிலேயே சில நீர்த்தேக்கங்கள் பொலிஸ் அதிரடிப் படையின் பாதுகாப்பின் கீழ் கொண்டு வரப்படவுள்ளன. விவசாயிகள் விடுத்த அச்சுறுத்தல் காரணமாக சமனலவெவ நீர்த்தேக்கம் பொலிஸ் அதிரடிப்படையின் கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்டுள்ளது.

இதன்மூலம் இலங்கையின் வரலாற்றில் வறட்சியின் விளைவாக முதல் முறையாக இப்போதே தண்ணீருக்குப் பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்ட சம்பவம் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம)

(தொடர்புடைய செய்தி பக்.2)

## யாழில்...

யாழ்.மாவட்டச் செயலகத்தில் சிறுவர் பாதுகாப்புக் கூட்டம் நேற்றையதினம் இடம்பெற்றபோதே இவ்வாறு சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இந்த 33 பேரில் 11 பேர் ஹெரோய்னுக்கும், 7 பேர் கஞ்சாவுக்கும், 8 பேர் ஐஸ் போதைப்பொருளுக்கும், மிகுதிப்பேர் போதை மாத்திரைகளுக்கும் அடிமையாகியுள்ளனர் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இவர்களில் பலர் புகைத்தலுக்கும் அடிமையாகியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்கள் தற்போது புனர்வாழ்வுத் திட்டங்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். (அ-ம-125)

## பாடசாலை...

பாடசாலை அதிபர்கள் கூட்டாகக் கோரிக்கை விடுத்தனர்.

யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றிலேயே அவர்கள் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளனர். இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

தரம் ஆறு முதல் ஒன்பது வரையிலான மாணவர்களுக்கு வெள்ளி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் தனியார் கல்விச் செயற்பாடுகளில் இருந்து விடுதலை அளித்தமையால் மாணவர்கள் மத்தியில் தற்போது நல்ல மாற்றங்களைக் காணக்கூடியதாக உள்ளது. சாரணியம், விளையாட்டு என பிற செயற்பாடுகளிலும் மாணவர்கள் ஈடுபடுவதற்கு இந்தத்திட்டம் உதவியாக உள்ளது. ஆனால், அத்துமீறிய தனியார் கல்வி நிலைய நடவடிக்கைகள் குறித்து இன்னும் தீவிரமாகச் சிந்திக்கப்பட வேண்டிய ஒன்றாகவே உள்ளது. குறிப்பாக உயர்தர மாணவர்களுக்கு பாடசாலை வேளைகளில் தனியார் கல்வி நிலையங்களில் கற்றல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதால், அவர்களின் பாடசாலைக் கற்றலும் பரீட்சை நடவடிக்கைகளும் பாதிக்கப்படுகின்றன.

அத்துடன், சாதாரணதரம் முடிந்தவுடன் மாணவர்களுக்கு ஓய்வை வழங்காமல் உயர்தர வகுப்புகள் தனியார் கல்வி நிறுவனங்களால் முன்னெடுக்கப்படுகின்றன. மேலும் பாடசாலை நாள்களில் காலை 7.30 மணிவரை கல்வி நிறுவனங்கள் இயங்குவதனால் காலை உணவின்றியே பெரும்பாலான மாணவர்கள் பாடசாலைகளுக்கு வருகின்றார்கள், பேருந்தையும் பலர் தவறவிடுகின்றனர். உளரீதியான பாதிப்புகளுக்கும் உட்படுகின்றனர். இது தொடர்பிலும் காத்திரமான தீர்வொன்று எடுக்கப்பட வேண்டும் - என்றனர். (அ-ம-125)

## சிறுவர்கள்...

கடந்த காலங்களில் நல்லூர் உற்சவங்களின்போது சிறுவர்கள், சிலரால் யாசகமெடுப்பதற்கு ஈடுபடுத்தப்பட்டனர். அத்துடன் யுவதிகள் சிலர் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டனர். இது பல்வேறுபட்ட சமூகச் சீர்கேடுகளுக்கு வழிவகுக்கின்றது என்று யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற சிறுவர் பாதுகாப்புக் கூட்டத்தில் கலந்தாலோசிக்கப்பட்டது. இதனால், இவ்வருடம் மேற்படி விடயங்கள் தொடர்பில் அவதானமாக இருப்பது என்றும், குறிப்பாக சிறுவர்கள் யாசகம் எடுப்பதை முற்றாகத் தடைசெய்வது என்றும் தீர்மானிக்கப்பட்டது. இது தொடர்பாக யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபருக்கும் அறிவிக்கப்பட்டது. (அ-ம-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைச் சிறையில் 56 மதகுருக்கள்!

கொழும்பு, ஓக. 9

இலங்கைச் சிறைச்சாலைகளில் 56 மதகுருக்கள் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர் என்று நீதி இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கைச் சிறைச்சாலைகளில் 56 மதகுருக்கள் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 48 பௌத்த தேரர்களும், 3 இந்துக் குருக்களும், 4 கத்தோலிக்க மதகுருக்களும், ஒரு மௌலவியும் அடங்குகின்றனர்.

சிறுவர் துஷ்பிரயோகக் குற்றச்சாட்டில் 19 பௌத்த தேரர்களும், ஒரு இந்துக் குருவும் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். பெண்கள் மீதான பாலியல் குற்றச்சாட்டில் 3 பௌத்த தேரர்கள் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். கத்தோலிக்க, இந்து மற்றும் இஸ்லாம் மத குருமார்கள் பெண்கள் தொடர்பான பாலியல் குற்றச்சாட்டில் சிறையில் இல்லை - என்றார். (அ-ம)

## ஹெரோய்னுடன் இளைஞன் கைது

யாழ்ப்பாணம், ஓக.9

யாழ்ப்பாணம், செம்மணிப் பகுதியில் ஹெரோய்னுடன் இளைஞர் ஒருவர் விசேட அதிரடிப்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இரகசியத் தகவலுக்கு அமையவே இந்தக் கைது நடவடிக்கை இடம்பெற்றதுடன், சந்தேகநபரான இளைஞனிடம் இருந்து 13 கிராம் ஹெரோய்னும் மீட்கப்பட்டது. அவர் சட்ட நடவடிக்கைகளுக்காக யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் பாரப்படுத்தப்பட்டார். (அ-ம,26)

## உடுவில் படுகொலை; சந்தேகநபர்கள் விளக்கமறியலில்

யாழ்ப்பாணம், ஓக. 9

உடுவில் பகுதியில் 54 வயதான நபரொருவர் அடித்துக் கொல்லப்பட்ட சம்பவத்தில் கைதுசெய்யப்பட்ட 6 சந்தேகநபர்களையும் எதிர்வரும் 22ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

19 வயது யுவதியுடன் காதல் வயப்பட்ட விவகாரத்தில் 54 வயதான மேற்படி நபர் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. அவர் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார்.

இந்தக் கொலையுடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் ஆறு பேர் கைதுசெய்யப்பட்டனர். அவர்கள் மல்லாகம் நீதிமன்றில் நேற்று முற்படுத்தப்பட்ட போதே அவர்கள் அனைவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. இதேவேளை - நேற்று மாலை மேலும் இருவர் சந்தேகநபர்களாகக் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம,125,27)


**தேவை**

யாழ். நகரில் உள்ள பிரபல ஹோட்டல் ஒன்றுக்க
✓Receptionist ✓Security
பணி வெற்றிடங்கள் உள்ளன.
தொடர்பு கொள்ளவும்.
076 624 8529
(CS/51557)AH-1

**தொலைந்துவிட்டது**

எனது மோட்டார் சைக்கிள் இலக்கத் தகடு (BEY-8712) நேற்றைய தினம் சாவகச்சேரியிலிருந்து கொடிகாமம் ஊடாக நெல்லியடிக்கு வந்து கொண்டிருந்த வேளை காணாமல் போய்விட்டது. கண்டெடுத்தவர்கள் எனது கைத்தொலைபேசி இலக்கத்திற்கு அறியத் தருமாறு தயவுடன் வேண்டுகிறேன்.
தொடர்பு: 077 834 9847
(CS 40389) A-1

**வேலையாட்கள் தேவை**

யாழில் பிரபல உயர்தர சைவ உணவகம் ஒன்றில் உடனடியாக பின்வரும் பதவிகளுக்கு வேலையாட்கள் தேவைப்படுகின்றனர். தகுதியான சம்பளம், உணவு, தங்குமிடம் போன்றன வழங்கப்படும்.
1. சுத்திகரிப்பாளர்கள் Cleaner 02
2. உணவு பரிமாறுபவர் Waiter 02
3. சமையல் உதவியாளர் Cook helper 02
4. உணவுப் பொதி செய்பவர் Parcel Maker 01
தொடர்பு: 077 361 1301, 077 711 2269
(CS 25889) A-1

DHL **துரித பொதிகள் சேவை**

சகல நாடுகளுக்கான துரித பொதிகள்
3-5 நாட்களில் ஒப்படைக்கப்படும்.
சாதாரண சேவை UK - 1000/=, Canada - 1000/=
மற்றைய நாடுகளுக்கும் விசேட சலுகைகள்
திருமுருகன் கொம்நெற் T.P: 0777 55 45 28
321, K.K.S. Road (முட்டாஸ் கடைச் சந்தி அருகாமையில்), யாழ்ப்பாணம்.

**விற்பனை பிரதிநிதி தேவை**

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பலசரக்கு மொத்த வியாபார நிலையம் ஒன்றிற்கு அனுபவம் உள்ள விற்பனை பிரதிநிதி தேவை.
வேலை நிபந்தனைகளுக்கு உட்பட்டது.
தொடர்புகளுக்கு- 076 119 0267
தொடர்புகொள்ளவேண்டிய நேரம்:
காலை 9.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணிவரை
(cs51521)(N-1)


# ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம் 07 • 08 • 1950

மறைவு 08 • 07 • 2023

கடந்த 08.07.2023 அன்று இறைபதம் எய்திய எமது குடும்பத்தின் ஆணிவேராய் இருந்து சாய்ந்த எமது அன்புத் தெய்வம்

## அமரர் ஏகாம்பரம் ஜெயக்குமார்

(உரிமையாளர் – City Tex மற்றும் JPY Fashion Club)

*திதி: ஆனிமாத தேய்பிறை சஷ்டி*

அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை பஜனையும், திருவுருவப் படத்துக்கு மலர் அஞ்சலி செலுத்தும் நிகழ்வுகளும் இன்று (09.08.2023) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் **நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில்** நடைபெற்று பின்னர் மதியபோசன நிகழ்வும் இடம்பெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் மறைவுச் செய்தியறிந்து நேரிலும், தொலைபேசி மூலமாகவும் அனுதாபம் தெரிவித்த உள்நாட்டு, வெளிநாட்டு உற்றார், உறவினர், எமக்குப் பலவழிகளிலும் உதவி புரிந்த நல்லுள்ளங்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

"பயன்தூக்கார் செய்த உதவி - நயன் தூக்கின் நன்மை கடலின் பெரிது"

**இல.465/16, பருத்தித்துறை வீதி, நல்லூர்.** (CS/51442)AH-1 **குடும்பத்தினர். 021 222 1445**

# 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



மலர்வு 10 • 01 • 1961

உதிர்வு 10 • 07 • 2023

கடந்த (10.07.2023) திங்கட்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி

## அமரர் சுப்பிரமணியம் அரியராணி

(ஸ்தாபகர் - முத்துக்குமரன் சுப்பர் மார்க்கெட் - கைதடிச்சந்தி, கைதடி)

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (09.08.2023) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் **கொழும்பு இல்லத்திலும்,** அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நிகழ்வு எதிர்வரும் (13.08.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் **கைதடி இல்லத்திலும்** நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் மறைவுச் செய்தியறிந்து நேரிலும், தொலைபேசி ஊடாகவும் ஆறுதல் கூறிய உள்நாட்டு, வெளிநாட்டு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(CS/23892)4,6 **குடும்பத்தினர்.**



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 09.08.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org